ஆறு தசாப்தங்களுக்கான சமூக வலுவூட்டல்

# சர்வோதய

## வருடாந்த சேவை அறிக்கை

2018 / 2019



இலங்கை தேசிய சர்வோதய
சிரமதான (கூட்டிணைக்கப்பட்ட) சங்கம்

# இலங்கை தேசிய சர்வோதய சிரமதான (கூட்டிணைக்கப்பட்ட) சங்கம்

## 2018-2019

## வருடாந்த சேவை அறிக்கை

# சர்வோதய சின்னம்

**சர்வோதய சின்னம் பிரதிபலிப்பவை**

**இதழ் வடிவங்கள் -கலாச்சார பாரம்பரியம்**

**சூரியன் - சர்வோதய தரிசனம்**

**தாமரை மலர் - தனி நபர் எழுச்சி அல்லது பூரண ஆளுமை**

**சேறு - சிதைந்த சமுதாயம்**

## நோக்கு

வறுமை மற்றும் பெருஞ்செல்வ நிலையிலிருந்து விடுபட்ட நிலைபேறான ஒரு சமூகத்தை மக்களின் பங்குபற்றலுடன் விருத்தி செய்து சர்வோதயத்தின் முழு அர்த்தத்தையும் அடைந்துகொள்ளும் அறிவு, எண்ணம், திறமைகளை முன்னிலைப்படுத்தி நிபுணத்துவத்தின் வழி நின்று சர்வோதயத்தின் தரிசனத்தையும் இலக்கையும் செயற்பாடுகளுடனான வினைத்திறன் ஆக்குவதற்காகவும் சமூகத்திற்கு பயனுள்ளதாக மக்களை அடையும் வகையிலும் சர்வோதயத்தினுடைய பின்பற்றுனர்களை உருவாக்குதல்.

## பணி

சமூக மற்றும் தேசிய மட்டங்களில் அடிப்படை மனித உரிமைகளை பெற்றுக் கொள்வதும் அடிப்படை மனித தேவைகளை நிறைவேற்றுவதும் பங்குபற்றல் ஜனநாயகத்திற்கு மதிப்பளிப்பதும் அதிகாரம் மற்றும் வளங்களின் நியாயமான பங்கீட்டை உறுதிப்படுத்துவதும் கலாசார, இன, மத மற்றும் மொழி வேறுபாடுகளை மரியாதையுடன் ஏற்றுக்கொள்வதுமான நிலைபெறுதகு சமூக ஒழுங்கு ஒன்றினை ஸ்தாபித்தல்.

## குறிக்கோள்

எங்களுடைய தாய் நாட்டை முன்னுதாரணமான மேன்மை தங்கிய சமூகம் என்ற வகையில் கட்டியெழுப்புதல் சர்வோயத்தின் குறிக்கோளாகும். இதற்காக குலம், இனம், மதம், கட்சி, உயர்வு, தாழ்வு, கற்றோர், கல்லாதோர் போன்ற மிகத் தாழ்வான மனித பேதங்களற்ற, இதயத்திலிருந்து இதயத்திற்கு, குடும்பத்திலிருந்து குடும்பத்திற்கு, கிராமத்திலிருந்து கிராமத்திற்கு சென்று சேவை செய்து நமது தாய் நாட்டை தர்ம தீபமாகவும், தானிய களஞ்சியமாகவும் ஆக்கல்.

### சர்வோதயத்தின் நோக்கம்

| தர்ம தீபம் | | தானியக்களஞ்சியம் |
|---|---|---|
| நல்லெண்ணம் கொண்ட, உயர் மனிதாபிமானமிக்க, முழு ஆளுமையுடைய, ஆன்மீக ரீதியில், அபிவிருத்தியடைந்த, மனித சமூகம் | ↔ | வறுமையற்ற, செல்வமற்ற, அடிப்படைத்தேவைகள் பூரணப்படுத்தப்பட்ட, சுக போகங்கள் சமமாக பகிரப்பட்ட, பௌதிக அபிவிருத்தி |
| தனி மனித அபிவிருத்தி | → | அன்பு, கருணை, பேரின்பம், சாந்தம் |
| சமூக அபிவிருத்தி | → | தானம், இன்சொல், நற்செயல், சமத்துவம் |
| பிரபஞ்சத்தின் அபிவிருத்தி | → | உண்மை, அஹிம்சை, தன்னலமற்ற |

| | |
|---|---|
| 1. தனி மனித எழுச்சி | பௌருசோதயம் |
| 2. குடும்பத்தின் எழுச்சி | குடும்போதயம் |
| 3. கிராமத்தின் எழுச்சி | கிராமோதயம் |
| 4. நகரத்தின் எழுச்சி | நகரோதயம் |
| 5. தேசத்தின் எழுச்சி | தேசோதயம் |
| 6. உலகத்தின் எழுச்சி | விஸ்வோதயம் |

# பொருளடக்கம்


- சர்வோதய சின்னம் 02
- இலங்கை தேசிய சர்வோதய சிரமதான (கூட்டிணைக்கப்பட்ட) சங்கம்
  - நோக்கு
  - பணி
  - குறிக்கோள்
  - இலக்கு
- சர்வோதய ஸ்தாபகர்/ஓய்வு பெற்ற தலைவர் கலாநிதி ஏ.டீ.ஆரியரத்ன அவர்களின் செய்தி 06
- கௌரவ தலைவரின் செய்தி 07
- கௌரவ பொதுச்செயலாளரின் செய்தி 08
- நிறைவேற்றுப் பணிப்பாளரின் செய்தி 09
- நிர்வாக சுருக்கம் 10
- நிர்வாக குழு 11
- சர்வோதய மாவட்ட நிலையங்கள் 12
- சர்வோதய சங்கத்தின் உறுப்பினர் உள்ளடக்கம் 13
- நிறுவன கட்டமைப்பு 14
- முகாமைத்துவ குழு 15
- பிரிவுத் தலைவர்கள் 16
- மாவட்ட இணைப்பாளர்கள் 17
- சர்வோதய சங்கத்தின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு பங்களிப்பு செய்யும் பிரிவுகள் 18
  - ஆரம்பகால குழந்தை பருவ வளர்ச்சி பிரிவு 19
  - மனித வள பிரிவு 22
  - சாந்தி சேனா இயக்கம் 25
  - விஸ்வ நிகேதன் சமாதான நிலையம் 28
  - வெளிக்கள தொழிற்பாட்டுப் பிரிவு 31
  - சிரமதான சங்கங்களுக்கான மத்திய நிலையம் 35
  - கருத்திட்ட முகாமைத்துவ பிரிவு 38
  - நகரோதயம் 41
  - தேசோதய பிரிவு 44
  - சர்வோதய உயர் கல்வி நிறுவகம் 47
- சர்வோதய பண்ணைகள் 50
- சர்வோதய அபிவிருத்தி நிதி நிறுவனம் 52
  - சீட்ஸ் நிறுவனம் 55
  - சர்வோதயத்தின் நிலையான பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் 56
  - சர்வோதய தொழிநுட்பச் சேவைகள் பிரிவு 58
  - பியுஷன் பிரிவு 61

- சர்வோதய மகளிர் இயக்கம் 64
- சர்வோதய மர வேலை உற்பத்தி பிரிவு 67
- சர்வோதய நம்பிக்கை நிதியம் 69
- சர்வோதய சுவசெத சேவை பிரிவு 71
- சர்வதேச பிரிவு 74
- வள அபிவிருத்தி பிரிவு 77
- ◆ சர்வோதய சங்கத்தின் நிதி கண்ணோட்டம் 80
- ◆ கணக்காய்வு அறிக்கை 82
- ◆ நிறைவேற்று சபை 86
- ◆ அபிவிருத்திக்கான நிதி வழங்குனர் பட்டியல் 87
- ◆ சர்வோதய சங்கத்துடன் இணைந்துள்ள சுயாதீன நிறுவனங்கள் 88
- ◆ சர்வோதய மாவட்ட நிலையங்களின் விபரங்கள் 89
- ◆ விசேட விருந்தினர் வருகை 90
- ◆ சர்வோதய ஸ்தாபகர்/ ஓய்வு பெற்ற தலைவர் கலாநிதி ஏ.ரீ.ஆரியரத்ன அவர்களுக்கு வழங்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விருதுகள் பட்டியல் 92
- ◆ சர்வோதய கல்வி அபிவிருத்தி நிலையங்களின் தலைவர்கள் 93

# சர்வோதய ஸ்தாபகர், ஓய்வு பெற்ற தலைவர் கலாநிதி ஏ.டீ.ஆரியரத்ன அவர்களின் செய்தி



கடந்த மகா சபை கூட்டத்தில் சர்வோதய தலைவர் அதிகாரப்பூர்வமாக விலகினாலும் கௌரவ ஓய்வு பெற்ற தலைவராக நியமித்ததற்கு அங்கத்தவர்களுக்கு தனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். சர்வோதயத்தை தழுவிய ஒருவரை இந்த ஒரு வாழ்க்கைக்குள் மட்டும் மட்டுப்படுத்த முடியாது. அது மரணத்தின் பின்னரான வாழ்க்கையிலும் வருகிற ஒரு நல்ல பயணமாகும்.

சர்வோதயத்தின் பிரதான பிரிவுகளான ஆன்மீகம், ஒழுக்கம், கலாச்சாரம், சமூக மற்றும் பொருளாதார பிரிவுகளுக்கு கடந்த அறுபது வருட காலமாக என்னால் முடிந்தளவு சேவையையும் மற்றும் அர்ப்பணிப்பையும் ஆற்றியுள்ளேன். ஆனாலும் சர்வோதயத்தின் உண்மையான முடிவுகள் மக்களுக்கு கிடைக்க வேண்டுமாயின் அரசியலில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும். கடந்த காலங்களில் சர்வோதயமானது ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கும், ஜனநாயக சமூகத்தை கட்டியெழுப்புவதற்கும் அவசியமான பல சேவைகளை செய்துள்ளது. ஆனாலும் இந் நாட்டின் அபிவிருத்திக்கு பிரதான தடையாக காணப்பட்டதும், சரிவிற்கான முதற் காரணியாகவும் எழுபத்தொரு வருடகாலமாக இந் நாட்டை அழிவிற்கு உட்படுத்திய கட்சி அரசியல் முறைக்கு அவதானத்தை செலுத்தவில்லை. அது எம்மால் தவறவிடப்பட்ட தேசிய கடமையாகும்.

1977ம் ஆண்டுப் பகுதியில் எமது நாட்டிற்கு வந்த திறந்த பொருளாதாரம் மற்றும் உலக பொருளாதாரத்தினால் இந் நாட்டில் காணப்பட்ட அனைத்து பிரிவுகளும் வீழ்ச்சியடைந்தது. சுதந்திரம் கிடைத்த போது ஆசியாவிலேயே முன்னேற்றம் அடைந்த நாடாக காணப்பட்ட இலங்கை தற்பொழுது வீழ்ச்சியடைந்த நாடாக மாறியுள்ளது.

இதனால் முப்பது வருட கால யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் தேசோதய பிரிவை வலுப்படுத்தி புதிய அரசியல் சிந்தனை மற்றும் அரசியல் வழிமுறைக்கு மக்களின் மனதை ஒருமுகப்படுத்துவதற்கு சர்வோதயம் தன்னை அர்ப்பணித்தது. பத்து வருடங்களுக்கு பின் பல நிறுவனங்களுடன் இணைந்து கட்சி அரசியலில் ஈடுபடாமல் புதிய அரசியல் மற்றும் பொருளாதார பாதைக்கு நாட்டை கவனம் செலுத்த வைப்பதை சர்வோதயம் ஆரம்பித்தது. 2019 ஆகஸ்ட் மாதம் 01ம் திகதியிலிருந்து 2020 செப்டம்பர் மாதம் 31ம் திகதி வரையிலான காலப்பகுதி மிக முக்கியம் வாய்ந்ததாக அமைவதற்கு காரணம் புதிய ஜனாதிபதி தேர்தலுக்கு மற்றும் பாராளுமன்ற தேர்தலுக்கு பின் வருகிற காலப்பகுதிக்குள் எதுவரைக்கும் எம்மால் நீதியான அரசுரிமையை நிலைநாட்டி லஞ்சம், ஊழல், கொமிஷன் வாங்காமல், களவு கொலை போன்ற கொடுமைகளிலிருந்தும் விடுபட்டு, போதை வஸ்த்துக்களை தடுத்து, அரசியலற்ற ஆண் பெண் சமத்துவத்தை கட்டியெழுப்பும் அரச சேவை, பாதுகாப்பு சேவை போன்றவற்றையும், வெளி நாடுகளின் உதவியை பெறாமல், தற்பொழுது இருக்கும் கடனை செலுத்தி மேலும் கடன்களை வாங்காமல் இருக்கும் பொருளாதார முறையை கட்டியெழுப்ப முடியுமா? போன்ற கேள்விகளுக்கு வெற்றிகரமான தீர்வை காண்பதற்கு தேசோதய பொருளாதார முறையின் ஊடாக சந்தர்ப்பம் உருவாக்கப்படுகிறது.அதற்கு மக்களை தயார் செய்தல் சர்வோதயத்தின் தேசிய கடமையாகும்

சர்வோதயத்திற்கு தங்களை அர்ப்பணித்துள்ள அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்..

இறைவன் உங்களை ஆசிர்வதிப்பாராக!
கலாநிதி.ஏ.ட.ஆரியத்ன
ஓய்வு பெற்ற தலைவர்

## கௌரவ தலைவர் அவர்களின் செய்தி



2019 வருடாந்த மகா சபை கூட்டம் நடாத்தப்படும் இன்றுடன் 71 ஆண்டுகள் இந் நாட்டை ஆட்சி செய்த அரசியல் முறையினால் எமது உள் நாட்டு சமூகம், பொருளாதாரம், அரசியல், ஒழுக்கம், கலாச்சாரம் மற்றும் சமூகம் போன்ற அனைத்து பிரிவுகளும் மிகப் பெரிய நெருக்கடி நிலையை சந்தித்துள்ளது.

இவ் வருடத்தின் முதல் பாதியில் சர்வோதய இயக்கத்தின் அவதானமாக இருந்தது எங்களின் 60 வருடகால சேவை அனுபவத்தை சாராம்சப்படுத்தி காலத்தின் தேவைகளை கண்டறிந்து எங்கள் முதன்மை நோக்கங்கள் மற்றும் குறிக்கோளுக்கு பாதிப்புக்கள் ஏற்படாத வண்ணம் மீதி பயணத்தை தொடர்ந்ததாகும்.

2019ம் ஆண்டு முதல் பிற்பகுதியில் எல்லாவற்றிற்கும் மேலாக தீர்மானிக்கப்பட வேண்டிய காரணியாக அமைந்தது நாட்டின் அரசியல் தலைவரை தேர்ந்தெடுக்கும் ஜனாதிபதி தேர்தலுக்கு இந் நாட்டின் அனைத்து சமூக சக்திகளும் ஒன்றிணைந்துள்ளன.

பிரதான சிவில் சமூக சக்தியான சர்வோதய இயக்கத்திற்கு தவிர்க்க முடியாத சந்தர்ப்பமாக இக் காரணி அமைவதால் இதன் அடிப்படையில் ஆறு தசாப்தங்களாக இடம்பெற்ற வளர்ச்சி மாதிரி அனுபவத்துடன் 2020ல் ஒரு மாற்று வேலைத்திட்டமாக அல்ல ஒரு புதிய அரசியல் கலாச்சாரத்திற்காக சரியான திசையில் செல்வதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும்.

இதுவரைக்கும் எம்மால் சமூகமயப்படுத்தப்பட்ட ஆன்மீக, தார்மீக, கலாச்சார, சமூக, பொருளாதார மற்றும் அரசியலையும் ஆறு விதமான அபிவிருத்தி நோக்கங்களை புதுபித்து நடாத்தி செல்ல வேண்டும் என்பதே எங்களது அபிப்ராயமாகும்.

உள்நாட்டின் பாதுகாப்பு மற்றும் தேசத்தின் எதிர்காலத்திற்காக நம்பிக்கையுடன் அர்ப்பணிப்பு செய்யும் ஒருவரை நியமிக்க வேண்டும் அல்லது 2019ம் ஆண்டு முடியுமுன் பாரம்பரிய முறைகளின்படியோ அல்லது பழக்கப்பட்ட முறைகளின் படி செயற்படாமல் ஆழமாக சிந்தித்து செயற்பட வேண்டும்.

அதற்காக சகலவித முற்போக்கான சமூக பணியாளர்களும் தங்களது கவனத்தை செலுத்த வேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

வைத்தியர்.வின்யா ஆரியரத்ன
கௌரவ தலைவர்,
இலங்கை தேசிய சர்வோதய
சிரமதான (கூட்டிணைக்கப்பட்ட) சங்கம்.

## கௌரவ பொதுச் செயலாளரின் செய்தி



2018ஃ2019 ஆம் ஆண்டானது ஆறு தசாப்த கால சர்வோதய வரலாற்றின் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த திருப்புமுனையை அடைந்துள்ளது. இக்காலப் பகுதியில் காணப்பட்ட சமூக, பொருளாதார அரசியல் படிநிலைகளில் ஏற்பட்ட பல்வேறுபட்ட முரண்பாடுகளுக்கு மத்தியில் கிராமிய மக்கள் பல்வேறுபட்ட சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். ஒட்டுமொத்த சர்வோதய இயக்கத்தின் நோக்கங்களை கருத்திற்கொள்ளும்போது எமது இயக்கத்தின் தேவையானது கடந்த வருடங்களைவிட காலத்திற்கு ஏற்ப முக்கியத்துவம் அடைந்துள்ளது. இத்தகைய பின்னணியில் எத்தகைய சவால்களுக்கு முன்னாலேனும் இன்னமும் கிராமிய மக்கள் சார்பாக தேசிய ரீதியில் இயங்கி வருகின்ற ஒரே மக்கள் இயக்கமாக சர்வோதயம் அமைந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இன்றைய அரசியல், சமூக மற்றும் பொருளாதார சவால்களுக்கு முன்னால் சர்வோதயத்தின் தத்துவம் மற்றும் கொள்கைகள் என்பவற்றை அந்த வகையிலேயே முன்னெடுத்துச் செல்வதற்கு முடிந்துள்ளமையானது எமது இயக்கத்தின் வெற்றியை வெளிப்படுத்துகின்ற ஓர் அளவுகோலாகும். அதேவேளை கடந்த தசாப்தத்தில் எமது நாட்டின் அபிவிருத்தியின்பால் தீர்க்கமான காரணியாக அமைந்த தகவல் தொழில்நுட்பத்துடன் எமது கொள்கைகளைப் பாதுகாத்து சமூகமயமடைந்தமையும் விசேட விடயமாகும்.

சர்வோதய இயக்கத்தின் பலம் மக்களாவார்கள். அதன் பிரகாரம் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு நடவடிக்கையும் சமுதாயம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றது. இச் சேவைகள் நீண்டகால ரீதியில் சமூக வலுவூட்டல் செயன்முறையின் ஒரு அங்கமாக அமைகின்றது. தற்போது காணப்படுகின்ற சர்வோதய சிரமதான சங்கங்கள், தேசோதய குழுக்கள் மற்றும் ஏனைய சமுதாயக் குழுக்கள் இத்தகைய சமூகப் பணியின் வெற்றிகரமான பெறுபேறுகள் ஆகும்.

எதிர்வரும் தசாப்தத்தில் இப்பணியினை விரிவாக்கி இத்தகைய சமூக குழுக்களுக்கான சேவைப் பரப்பினை மேம்படுத்துவதும் மிக முக்கியமாகும். கௌரவ ஓய்வு நிலைத் தலைவர் கலாநிதி.ஏ.ரீ. ஆரியரத்ன அவர்களினால் ஆறு தசாப்தங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இயக்கத்தினால் அவரது தத்துவம், எதிர்கால நோக்கு மற்றும் நாட்டுக்குப் பொருத்தமான முன்மாதிரியான சமூகமுறை என்பவற்றை உருவாக்குவதற்காக அவர் மேற்கொண்ட முயற்சி, உழைப்பு, அர்ப்பணிப்பு சதாகாலமும் நீடித்து நிலைத்திருக்கும்.

சங்கத்தின் இன்றைய கௌரவத் தலைவர் வைத்திய வின்யா ஆரியரத்ன அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் சர்வோதய இயக்கம் எதிர்வரும் தசாப்தத்தில் புதிய பரிமாணத்தை நோக்கிச் பயணிக்கும் என்பது எமது நம்பிக்கையாகும்.

சட்டத்தரணி எஸ். குணரத்ன
கௌரவ பொதுச் செயலாளர்
இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கம்

## நிறைவேற்றுப்பணிப்பாளரின் செய்தி



சர்வோதய சிரமதான சங்கமானது அதன் அறுபதாவது ஆண்டு பூர்த்தியினைக் கொண்டாடுகின்ற வரலாற்று சிறப்புமிக்க இத்தருணத்தில் 2018/19ஆம் ஆண்டுக்கான சர்வோதய சேவைகள் பற்றிய அறிக்கையின் பொருட்டு நிறைவேற்றுப்பணிப்பாளர் என்ற வகையில் ஒரு செய்தியை வழங்கக் கிடைத்துள்ளமையை நான் பெற்ற பாக்கியமாகக் கருதுகின்றேன். இலங்கையில் மட்டுமல்ல சர்வதேசத்தை நோக்குகின்ற போதிலும் சர்வோதயத்தினைப் போன்று சேவையினை முன்மாதிரியாகக் கொண்ட உலகளாவிய தத்துவத்தினால் நிறைந்துள்ள இன,மத,சாதிபாகுபாடுகளுக்கு அப்பால் சென்று அனைத்து மக்களுக்கும், விலங்கினங்களுக்கும், சுற்றாடலுக்கும் நெருக்கமாக செய்யப்படுகின்ற நிலைபேறான மக்கள் இயக்கமொன்று தொடர்பாக சிந்திப்பதும் கடினமாக உள்ளது. சர்வோதயம் உலகிற்குக்கொடையளித்த பல பரம்பரைகளாக வளர்ந்து வருகின்ற சர்வதேச, உள்நாட்டு, பிரதேச மற்றும் கிராமியத் தலைமைத்துவமும், சர்வோதயதத்துவத்தினால் தமது ஆளுமை மற்றும் குடும்பங்களை வடிவமைத்துக் கொண்ட சர்வோதய செயற்பாட்டாளர்களும்,உண்மை,அகிம்சை மற்றும் சுயநலமின்மை என்பவற்றை முதலாகக் கொண்டு வாழ்க்கையில் ஆதரவற்ற மனிதர்களுக்கு ஊன்றுகோலாக அமைந்து,சமூகத்தில் குரல் எழுப்ப முடியாதவர்களுக்காக குரல் எழுப்பி,சர்வோதய சமூக முறையொன்றின் பொருட்டு அர்ப்பணிப்புடன் தமது சுயேச்சையான பங்களிப்பினை சமூக நலனுக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் பெற்றுக்கொடுக்கின்றது. சர்வோதயத்தின் அறுபதாம் ஆண்டுப் பூர்த்தி கொண்டாடப்படுகின்ற இத்தருணத்தில் இந்த நீண்ட பயணத்துக்கு தலைமைத்துவம் வழங்கிய மற்றும் ஆதரவளித்த அனைவரையும் அனைத்து முழுநேர சேவையாளர்களையும் இதய பக்தியுடன் நினைவு கூறுகின்றேன்.

2018/19 சேவை அறிக்கையைத் தயாரிப்பதற்கு அயராது உழைத்த உங்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்து கடந்தகாலத்தினை யதார்த்தமிக்கதாக ஆக்கியதைப் போன்று எதிர்காலத்தையும் யதார்த்தமாக்குவதற்காக எம்முடன் கைகோர்த்துக்கொள்ளுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்!

# நிறைவேற்றுச் சுருக்கம்

22018/2019 சேவை வருடமானது சர்வோதயத்தின் 60வருடகால வரலாற்றில் ஒரு முக்கியமான திருப்புமுனையாக அமைந்தது. சர்வோதய சிரமதான சங்கமானது அதன் அறுபதாம் ஆண்டுப் பூர்த்தியினை "மனித குலத்திற்கான அறுபதாண்டு சேவை" எனும் தொனிப்பொருளின் கீழ் கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் ஆயிரத்துக்கும் அதிகமான உள்நாட்டு, வெளிநாட்டு மாண்புறும் அழைப்பு விருந்தினர்களின் பங்கேற்புடன் வெகுவிமரிசையாக 2018 டிசம்பர் மாதம் 08 ஆம் திகதி நடத்தியது மட்டுமல்ல சர்வோதயத்தினது வரலாற்றின் பாதச்சுவடுகள்,வெற்றிகள் மற்றும் பாடங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டும் எதிர்வரும் தசாப்தத்திற்கான சவால்களை இலக்காகக் கொண்டும் அனைத்து சர்வோதய பிரிவுகள்,சுயாதீன அலகுகள் மற்றும் சர்வோதய சிரமதான சங்கங்கள் என்பவற்றை பங்கேற்கச் செய்து"அறுபது வருடங்களின் பெருமை – புதிய உலகிற்கான அடியெடுப்பு" 2018-2028 எனும் 10 வருட சர்வோதய மூலோபாயத் திட்டம் வெளியிடப்பட முடிந்தமை என்பன நாம் அனைவரும் பெற்ற வெற்றியாகும்.

15 மூலோபாய நோக்கங்களின் ஊடாக தனிநபர் மற்றும் சமுதாயம் என்பவற்றின் ஆன்மீக, நல்லொழுக்க, கலாசார,சமூக,பொருளாதார மற்றும் அரசியல் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு சர்வோதய தாய்ச்சங்கம் மற்றும் சர்வோதயத்திற்கான அனைத்து சுயாதீன நிறுவனங்கள் என்பவற்றை"ஒரு சர்வோதய" கொடியின் கீழ் ஒருங்கிணைப்பதற்கும் சர்வோதயம் கொண்டுள்ள அனைத்து உள்ளார்ந்த ஆற்றல்களையும் சக்திகளையும் இலங்கை பூராகவும் பரவிக்காணப்படுகின்ற சகல இன,மதமற்றும் சமூகபடிநிலைகளில் காணப்படுகின்ற விளிம்பு நிலை சமுதாயங்களினதும் சர்வோதய சிரமதான சங்கங்களினதும் முன்னேற்றத்திற்காக ஈடுபடுத்துவதற்கும் சமுதாயப் பங்கேற்பு மற்றும் ஆலோசனை என்பவற்றின் மூலம் வலுவான பிரஜையையும் இலங்கை அரசியல் கலாசாரத்தின் சாதகமான மாற்றத்தினையும் ஏற்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்கள் 60வருடத்தின் பெருமை புதிய உலகிற்கான அடியெடுப்பு மூலோபாயத் திட்டத்தின் மூலம் சர்வோதயத்தின் சகல பிரிவுகளுக்கும் பெற்றுக்கொடுக்கப்படும்.

கடந்த 2018/2019 தேசோதயம் நிகழ்ச்சித் திட்டம் தேசோதய மாகாண மாநாடுகள் ஒன்பதனை மிகவும் வெற்றிகரமாக நடாத்தியதற்கு மேலதிகமாக தகவல் அறிவதற்கான உரிமை, திறந்த அரச பங்காண்மை, மக்கள் அரசியலமைப்புக்கான முன்மொழிவுகள் மற்றும் நிழல் பிரதேச சபைகள் போன்ற வகையில் அடிமட்டத்தில் பிரஜைகளை வலுவூட்டுவதற்கான செயற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டன. 2018 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளம் மற்றும் இயற்கை அனர்த்தங்களின் போது அவற்றின் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு மேலதிகமாக அனர்த்தங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய தன்மையை ஏற்படுத்துவதற்காக நீண்டகால நிகழ்ச்சித்திட்டம் ஒன்றுக்கான அடித்தளமும் இடப்பட்டது. சர்வோதய கருத்திட்டப் பிரிவு பிள்ளைகளின் பாதுகாப்புத் தொடர்பாக பல கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளதோடு பிள்ளைகளின் பாதுகாப்பு சம்பந்தமாக அர்ப்பணிப்புச் செய்யப்பட்ட அரச நிறுவனங்களை இணைத்துக்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட"சமூகசேவைகள் செயலணி" கருத்திட்டம் அரசதுறை மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியம் இணைந்து முன்னெடுக்கப்பட்ட ஒரு முயற்சியாக காணப்பட்டது. இளைஞர்களின் எதிர்காலத்தினை ஒளியூட்டுவதற்காக தருணோதயம் எனும் இளைஞர் தொழில் முயற்சிக்கருத்திட்டம் 08 நிர்வாக மாவட்டங்களின் இளைஞர்களையும் யுவதிகளையும் அடிப்படையாகக் கொண்ட 160 இளைஞர் தொழில்முயற்சிகளை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டன. அதேவேளை இளைஞர் யுவதிகளின் தலைமைத்துவம் மற்றும் அரசியல் ஆற்றலை விருத்திசெய்வதற்கு"தேசோதயம் அடுத்தபரம்பரை" கருத்திட்டமும் இக்காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டது. விவசாயம்,சுகாதாரம் மற்றும் போசனை ஆகிய துறைகளை கருத்திற்கொள்ளும்போது சந்தை சார் பால் உற்பத்திக் கருத்திட்டம், பிள்ளைகளின் சுகாதாரம் மற்றும் போசாக்கு நிலைமை முன்னேற்றப்படுத்தப்படுவதனை நோக்கமாகக் கொண்ட"பாலம்" கருத்திட்டம் என்பன கோடிட்டுக் காட்டக்கூடிய வேலைப் பகுதியை நிறைவேற்றியுள்ளன. அமெரிக்க தூதுவராலயத்தின் அனுசரணையில் நடைமுறைப்படுத்தப்பட்ட சிறிய மற்றும் விசேட நிதி ஒதுக்கீடுகள் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் சமூக உபசரணையில் ஈடுபடுகின்ற அமைப்புகளுக்கும் நபர்களுக்கும் நிதிசார் ஆதரவினை வழங்க முடிந்தது.

சர்வோதய சிரமதான சங்கத்தின் வருமானம் ஈட்டல், பொருளாதார உறுதிப்பாடு மற்றும் நிலைபேறான தன்மை தொடர்பாகவும் விசேட வேலைப் பகுதி கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டது. வள அபிவிருத்திப்பிரிவு, மரவேலை உற்பத்தி பிரிவு,சர்வோதய பியூ'ன் நிறுவனம், சர்வோதய சர்வதேசப் பிரிவு என்பன வருமானம் ஈட்டுகின்ற விடயத்தில் கோடிட்டுக் காட்டக்கூடிய முன்னேற்றத்தினை அடைந்துள்ளன, வெளிக்கள தொழிற்பாட்டுப் பிரிவின் தலைமைத்துவத்தினால் மாவட்ட வள அபிவிருத்தியும் யாழ்ப்பாணம்,மட்டக்களப்பு மற்றும் வெல்லவாய ஆகிய மாவட்ட நிலையங்களில் புதிய கட்டுமான பணிகளும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒட்டுமொத்தமாக நோக்கும் போது சர்வோதயத்திற்கு பெருமளவிலான நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள முடிந்ததும்,எதிர்காலத்தின் பொருட்டு நிலையான அடித்தளத்தை இட்டுக்கொள்ள முடிந்துள்ளதும் அனைத்துப் படிநிலைகளிலும் சர்வோதயத்தின் பணியாளர் தொகுதிகளுக்கு மத்தியில் ஒத்துழைப்பு வளர்ச்சியடைந்துள்ளதும் ஆயிரக்கணக்கான சர்வோதய சிரமதான சங்கங்களுடன் உயிரோட்டமிக்க வகையில் இணைந்து கொள்ள முடிந்துள்ளதுமான வெற்றிகரமான வருடமாக 2018/ 2019 ஆம் ஆண்டினைக் கருத முடியும். இந்த அனைத்து பணிகளுக்குமாக வழிகாட்டி தலைமைத்துவம் வழங்கிய சர்வோதயத்தின் புதிய தலைவர், பொதுச்செயலாளர் மற்றும் பொருளாளர் என்போரை உள்ளிட்ட அனைத்து உத்தியோகத்தர்களையும் பெரியோர்களையும் இத்தருணத்தில் நன்றியுணர்வுடன் நினைவு கூறுகின்றேன்.

# நிர்வாக குழு



**(இடமிருந்து வலமாக இரண்டாவது வரிசையில்)**

செல்வி.சந்திரலதா குமாரிஹாமி - உப தலைவர்
திரு.வி.ஜீவராஜ் - உப தலைவர்
திரு.சஞ்ஜீவ இலங்கக்கோன் - உப தலைவர்
திரு.நிஷாந்த பிரிதிராஜ் - மேலதிக செயலாளர்
திரு.ரவீந்திர ஆரியவிக்கிரம - மேலதிக செயலாளர்
திருமதி.மைத்திரி மல்வத்தேகொட - மேலதிக செயலாளர

**(இடமிருந்து வலமாக முதலாவது வரிசையில்)**

திரு.சன்ன அஜித் த சில்வா - உப தலைவர்
திரு.ரோஹண ஹெட்டிஆராச்சி - உப தலைவர்
சட்டத்தரணி ஷெவோன் குணரத்ன - கௌரவ பொதுச் செயலாளர்
வைத்தியர் வின்யா எஸ் ஆரியரத்ன - கௌரவ தலைவர்
திரு.தேஷாந்த த அல்விஸ் - கௌரவ பொருளாளர்
திரு.ரவீந்திர கந்தகே - உப தலைவர்
திருமதி.நீதா ஆரியரத்ன - உப தலைவர்

**(வருகை தரவில்லை)**

கலாநிதி.வோல்டர் லிங்க் - உப தலைவர்




| | | |
|---|---|---|
| ◉ | மாவட்ட நிலையங்கள் | 26 |
| ✳ | அபிவிருத்தி கல்வி நிலையங்கள | 10 |
| ● | வள நிலையங்கள் | 05 |
| ▲ | பண்ணைகள் | 03 |
| ◆ | பல்நோக்கு மையம் | 06 |

| | |
|---|---|
| மாவட்ட நிலையங்கள் | 26 |
| பிரதேசங்கள் | 325 |
| கிராமங்கள் | 15,000 |

## சர்வோதய சங்கத்தின் உறுப்பினர் உள்ளடக்கம்



## சர்வோதய சிரமதான சங்கம் (INC.) - 2018 ஜூன் 1 ஆம் திகதியிலிருந்து முன்மொழியப்பட்டுள்ள நிறுவனக் கட்டமைப்பு



# முகாமையாளர் குழாம்



**இடது மூலையிலிருந்து முதலாவது வரிசை**

திரு.மனோஜ் சில்வா (முகாமையாளர் - நிர்வாகம்),
ஜே.எம்.எம்.நிஸ்வி (பணிப்பாளர் - செயற்திட்டப் பிரிவு),
திரு.ரவிந்திர எஸ் ஆரியவிக்கிரம ( பணிப்பாளர்-வெளிக்கள பிரிவு),
திரு.சாமிந்த ராஜகருணா (வழக்கறிஞர்) (நிறைவேற்றுப் பணிப்பாளர்),
திரு.ஜே.ஜீ.கே.கமல் கமகே (பணிப்பாளர் - நிதிப்பிரிவு),
திரு.நிஷாந்த பிரிதிராஜ் (தேசிய ஒருங்கிணைப்பாளர்- தேசோதயம்),
திரு.பந்துல சேனாதீர (பணிப்பாளர் - சர்வதேச பிரிவு),

**பங்கேற்காதவர்கள்**

திருமதி.மேனு நிலுக்ஷிகா டி சில்வா ( முகாமையாளர்- மனிதவள பிரிவு),
திருமதி.அஞ்சானா மாபா திசாநாயக்க (சட்ட அதிகாரி),
திரு.தரிந்து குணதிலக (முகாமையாளர்- OSF),
திரு.கே.பி.மஹாகெதர (பணிப்பாளர் - மத்திய மாகாணம்)

# பிரிவுத் தலைவர்கள்



**இடது மூலையிலிருந்து முதலாவது வரிசை**

ஜே.எம்.எம்.நிஸ்வி (பணிப்பாளர் - செயற்திட்டப் பிரிவு),
திரு.ரவீந்திர எஸ் ஆரியவிக்கிரம (பணிப்பாளர்-வெளிக்கள பிரிவு),
திரு.சாமிந்த ராஜகருணா (வழக்கறிஞர்) (நிறைவேற்றுப் பணிப்பாளர்),
திரு.ஜே.ஜீ.கே.கமல் கமகே (பணிப்பாளர் - நிதிப்பிரிவு),
திரு.நிஷாந்த பிரிதிராஜ் (தேசிய ஒருங்கிணைப்பாளர் -தேசோதயம்)

**இடது மூலையிலிருந்து இரண்டாவது வரிசை**

திரு.ஐ.பி.என்.புஷ்பகுமார (உள்ளக கணக்காய்வாளர்),
திருமதி.மாலனி பாலசூரிய( ஒருங்கிணைப்பாளர் - சிறுவர் மேம்பாட்டு பிரிவு),
திரு.பந்துல சேனாதீர (பணிப்பாளர் - சர்வதேச பிரிவு),
திரு.லால் குணரத்ன (முகாமையாளர் - மர வேலை உற்பத்தி பிரிவு),
திருமதி.சுனேத்ரா சமரசிங்க (முகாமையாளர்- வள மேம்பாட்டு பிரிவு),
திரு.மனோஜ் சில்வா (முகாமையாளர் - நிர்வாகம்),

**பங்கேற்காதவர்கள்**

திருமதி.மேனு நிலுக்ஷிகா டி சில்வா ( முகாமையாளர் - மனிதவள பிரிவு),
திருமதி.மைத்திரி மல்வத்தேகொட (பொது முகாமையாளர்- பியூஷன்),
திரு.தரிந்து குணதிலக (முகாமையாளர் OSF)

# மாவட்ட இணைப்பாளர்கள்



**இடது மூலையிலிருந்து முதலாவது வரிசை**

தயா ஜாலன் (தணமல்வில), சமந்த திசாநாயக (இரத்தினபுரி), சுனேத்ரா வீரசிங்க (புத்தளம்),
கே.பி.தசனாயக்க (மாத்தளை) சந்திரலதா குமாரிஹாமி (அநுராதபுரம்),
அசோக்கா குசும் தர்சனி (பதுளை),
பிரியந்தி சி லியனகே (வெல்லவாய),

**இடது மூலையிலிருந்து இரண்டாவது வரிசை**

கிஹானி தல்வத்த (நுவரெலியா), நிமல் கொத்தலாவல (களுத்துறை),
கே.பி.மஹாகெதர (கண்டி), பிரியந்த பிரியதிலக (கேகாலை),
வி.ஜீவராஜ் (திருகோணமலை), ஜயலத் சோமசிறி (பதவிய),

**இடது மூலையிலிருந்து மூன்றாவது வரிசை**

சி.எல்.ஐ.எம்.எஸ்.சி.மணிக்கே (குருணாகலை), இ.எல்.எ.கரீம் (மட்டக்களப்பு),
ஜே.எம்.மாஹீர் (கிளிநொச்சி), யோகேந்திரன் (மன்னார்), ஏ.எம்.பி.பி.அதிகாரி (காலி),

**இடது மூலையிலிருந்து நான்காம் வரிசை**

எஸ்.சத்தியகுமார் (வவுனியா), அனுருத்த சஞ்ஜீவ (அம்பாறை), எச்.எஸ்..எச்.சோமசிறி
(மாத்தறை), இந்துனில் ஹித்தெட்டிய (கொழும்பு)

**<u>பங்கேற்காதவர்கள்</u>**

சிறிமா ஹெட்டியாராச்சி (கம்பஹா), கே.ஏ.விஜயசேன (ஹம்பாந்தொட்டை),
ஆர்.பி.நந்தசேன (பொலன்னறுவை)

# எசர்வோதய சங்கத்தின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு பங்களிப்பு செய்யும் பிரிவுகள்

### தனி மனித வள எழுச்சி பௌருசோதயம்

- அழும்பகால குழந்தை பருவ வளர்ச்சி பிரிவு
- மனித வள பிரிவு
- சாந்தி சேனா இயக்கம்

### குடும்பத்தின் எழுச்சி-குடும்போதயம்

- விஸ்வ நிகேதன் சமாதான நிலையம்

### கிராமத்தின் எழுச்சி-கிராமோதயம்

- வெளிக்களப் பிரிவு
- சிரமதான சங்கப் பிரிவு
- கருத்திட்ட முகாமைத்துவ பிரிவு

### நகரத்தின் எழுச்சி-நகரோதயம்

- வெளிக்களப் பிரிவு
- நகரோதயம்

### தேசத்தின் எழுச்சி-தேசோதயம்

- தேசோதய பிரிவு
- சர்வோதய உயர் கல்வி நிறுவகம்
- சர்வோதய பண்ணைகள்
- சர்வோதய அபிவிருத்தி நிதி நிறுவனம்
- சர்வோதய பொருளாதார சுயதொழில் அபிவிருத்தி சேவை
- சர்வோதயத்தின் நிலையான பொருளாதார அபிவிருத்தி
- சர்வோதய கிராம தகவல் தொழிநுட்ப சேவை
- சர்வோதய தகவல் தொழிநுட்ப சேவை இணைப்பு (பியூஷன்)
- சர்வோதய மகளிர் இயக்கம்
- சர்வோதய மர வேலை உற்பத்தி பிரிவு
- சர்வோதய நம்பிக்கை நிதியம்
- அருங்காட்சியகம்
- சர்வோதய சுவசெத சேவை

### பிரபஞ்சத்தின் எழுச்சி-விஸ்வோதயம்

- சர்வதேச பிரிவு
- வள அபிவிருத்தி பிரிவு













முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு

**அறிமுகம்**

தனித்துமான ஒரு விடயமாகிய சிறுவர் அபிவிருத்திக்குத் தேவையான உள்ளக மற்றும் வெளிச் சூழலை விபரித்துக்கொண்டு அதற்கு இசைவாக்கம் அடையும் வகையில் உபாய மார்க்கங்களை இனங்கண்டு அவற்றை செயற்பாட்டு ரீதியான திட்டங்களாக மாற்றியமைத்துக்கொண்டு சிறுவர் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி/சிறுவர்களின் நலனோம்பல்/உள சமூக அபிவிருத்தி/குடும்ப மற்றும் சமுதாய அடிப்படையிலான பாதுகாப்பு/குடும்பக் கூட்டுத்தாபனம் உயிர்ப்பூட்டப்படுதல்/முன்பிள்ளைப்ப பருவ அபிவிருத்தி நிலையங்களை முன்னேற்றுதல் மற்றும் ஆசிரியைகளின் அறிவினை இற்றைப்படுத்துதல் சார்பாக 2018/2019 ஆம் ஆண்டு சிறுவர்களுக்கும் சமுதாயத்திற்கும் பயனுள்ள சேவையை வழங்குவதற்காக சிறுவர் அபிவிருத்திப் பிரிவு பணியாற்றியது. அதேவேளை தமது சூழலுக்கு ஏற்றவகையில் கற்றல் செயன்முறையை தரமிக்கதாக அமைத்துக்கொள்ளும் பொருட்டு முன்பிள்ளைப் பருவ ஆசிரியர்களுக்குத் தேவையான அறிவு, திறன் மற்றும் ஆற்றல்கள் என்பவற்றை மேம்படுத்துவதற்காக பணியாற்றியுமுள்ளது. பிள்ளைப் பருவத்தில் பௌதீக, அறிவுசார் மற்றும் உள சமூக அபிவிருத்தியை மேம்படுத்தி தமது பொறுப்புக்களை சிறந்த முறையில் இனங்கண்ட, அறிவினாலும் ஆற்றலினாலும் நிறைந்த பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களை உருவாக்குவதன் மூலம் சிறுவர் சந்ததியை உருவாக்குவதற்காக பணியாற்றுவது எமது நோக்குப் பணியாகும்.

**அமுலிலுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்**

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனித நேய பதிற்செயற்பாடுகள் கல்வி, சிறுவர் பாதுகாப்பு மற்றும் துப்பரவேற்பாடு (இரத்தினபுரி, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை)

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நிகழ்ச்சிதிட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| உள சமூக அபிவிருத்தி | 10 |
| சிறுவர் குழுக்களை உருவாக்குதல் | 12 |
| சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக சிறுவர் குழுக்களின் அங்கத்தவர்களை விழிப்பூட்டுதல் | 12 |
| முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களை மறுசீரமைத்தல் | 15 |
| கருத்திட்டம் தொடர்பாக சேவையாளர்களை விழிப்பூட்டுதல் | 01 |
| சமுதாயம் மற்றும் கிராமியத் தலைவர்கள் விழிப்பூட்டப்படுதல் கல்வியின் முக்கியத்துவம், சிறுவர் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி | 10 |
| முன்பிள்ளைப் பருவ பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பாக முன்பிள்ளைப் பருவ ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கான செயலமர்வுகள் | 07 |
| கிராமிய மட்டத்தில் சிறுவர் அபிவிருத்திக் குழுக்கள் தாபிக்கப்படுதல் | 48 |
| கிராமிய மட்டத்தைச் சேர்ந்த சிறுவர் அபிவிருத்திக் குழு அலுவலர்களை விழிப்பூட்டுதல் | 15 |
| உலக சிறுவர் தினம் கொண்டாடப்படுதல். | 05 |
| சிறுவர் குழுக்களை உருவாக்குதல் மற்றும் மறுசீரமைத்தல் | 50 |
| சிறுவர் குழு அங்கத்தவர்களை விழிப்பூட்டுதல், சிறுவர் பாதுகாப்பு | 15 |

### சர்வோதயத்தின் 60 ஆம் ஆண்டுப் பூர்த்திக்குரியதாக நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

| தொடர் இல | மாவட்டம் | நிகழச்சிதிட்டத்தின் பெயர் | நிகழச்சிதிட்டங்களின் எண்ணிக்கை | பங்கேற்பாளர் எண்ணிக்கை | பயனுகரிகள் |
|---|---|---|---|---|---|
| 14 | நுவரெலியா | முன்பிள்ளைப் பருவ ஆசிரியைகளுக்காக ஆசிரியர் கௌரவிப்பு விழா நடத்தப்படுதல். | 01 | 350 | முன்பிள்ளைப் பருவ ஆசிரியைகள் பெற்றோர்கள் சிரமதான சங்க அலுவலர்கள் |
| 15 | கம்பஹா | முன்பிள்ளைப் பருவ ஆசிரியைகளை விழிப்பூட்டுதல் | 01 | 60 | முன்பிள்ளைப் பருவ ஆசிரியைகள் |
| 16 | மாத்தறை | முன்பிள்ளைப் பருவ ஆசிரியைகளை விழிப்பூட்டுதல் | 01 | 45 | முன்பிள்ளைப் பருவ ஆசிரியைகள் |

### பிரிவினால் நடைமுறைபடுத்தப்பட்ட செயற்பாடுகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறுகள்

#### முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களைச் சேர்ந்த ஆசிரியைகளை விழிப்பூட்டுதல்

முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களைச் சேர்ந்த ஆசிரியைகளுக்கு மத்தியில் சிறந்த இணைப்பாக்கம் ஏற்படுதல் மற்றும் தரநியமங்களுக்கேற்ப கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாட்டினை தரமாகப் பேணிச் செல்வதன் பொருட்டு முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையத்தின் வெளி மற்றும் அகச் சூழலை பிள்ளைகளுக்கு கற்றல் அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அமைத்துக்கொள்ள முடிகின்றமை.

#### சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் அதற்காக பக்கபலம் வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்

சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக சிறுவர்களையும் பெற்றோர்களையும் சமுதாயத்தையும் வலுவூட்ட முடிகின்றமை. ரசனை மற்றும் விளையாட்டு மீது கூடிய கவனம் செலுத்துவதற்கு பெற்றோர்களையும் பிள்ளைகளையும் ஊக்குவிக்க முடிகின்றமை.

#### சிறுவர்களின் தலைமைத்துவ திறன்களை மேம்படுத்துவதற்கும் சிறுவர்களின் நல்வாழ்வுக்குமாக சிறுவர் கூட்டினை உருவாக்குதல்.

சிறுவர் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி சார்பாக கிராமிய மட்டத்தில் சிறுவர் பாதுகாப்பு குழுக்களை உருவாக்கி சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக பெற்றோர்கள்/ சமுதாயம்/ கிராமியத் தலைவர்கள் விழிப்பூட்டப்படுதல் மற்றும் பாதிப்பு நிலைக்குள்ளான சிறுவர்கள் மற்றும் குடும்பங்கள் என்பவற்றை இனங்கண்டு அவர்களைப் பாதுகாப்பதற்கும் பொருளாதார மட்டத்தை உயர்த்துவதற்கும் முடிகின்றமை.

#### உள சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

அன்றாட வாழ்க்கையில் ஒரு மனிதன் முகங்கொடுக்கின்ற சவால்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய சாதகமான நடத்தைகள் வளர்ச்சியடைதல். பிரச்சினைகளை இலகுவாகப் புரிந்து கொள்ளுதல் மற்றும் சிக்கல்களை தீர்த்துக் கொள்வதற்கான ஆற்றல் அதிகரித்தல். சாதகமான இடைத் தொடர்புகள் பேணப்படுதல். உதவி தேவையானவர்களுக்கு உதவியளித்தல் மற்றும் உள ரீதியான அழுத்தங்களுக்கு முகங்கொடுப்பதற்கும் அவற்றைக் குறைத்துக் கொள்வதற்குமான ஆற்றல் விருத்தியடைதல்.











பௌருசோதயப் பிரிவு

## பௌருசோதயப் பிரிவு

சர்வோதய மக்கள் இயக்கத்தின் சாதகமான பகுதியானது மனித வளமாகும். சர்வோதயத்திற்கு மட்டுமல்லாது **60** வருட காலம் பூராக சர்வோதய வேலைத்திட்டத்தை தொடர்ச்சியாக இதுவரை முன்னெடுத்து வருவதற்கு சர்வோதய ஊழியர்கள் அதாவது சர்வோதயத்தின் மனித வளம் மேற்கொண்ட எல்லை கடந்த அர்ப்பணிப்பானது முதன்மையாக அமைந்திருந்தது. ஆரம்ப தசாப்தங்களில் வரையறுக்கப்பட்ட வளங்களுடன் பணியாற்றிய சர்வோதயத்தின் முகாமைத்துவத்திற்கு மேற்கூறப்பட்ட ஊழியர்களின் அர்ப்பணிப்பு பெரும் வசதியைப் பெற்றுக்கொடுத்தது. தூரக் கிராமங்களில் பல மைல்கள் நடந்து சேவைக்குச் சென்ற சர்வோதய தொழிலாளர்களின் சேவையானது அரச நிறுவனங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களின் எல்லைகளைக் கடந்து சமூகத்தை பின்னிக் கொண்டதனால் சமூகத்தில் காணப்படுகின்ற மக்களுக்கு நெருக்கமான குழுவினராக சர்வோதயத்தின் மனிதவளம் சமூக மயம் பெற்றது.

இயக்கத்தின் மனிதவளம் மிகவும் பொறுப்புடன் முகாமைத்துவம் செய்யப்படுவதோடு 2018/2019 ஆம் ஆண்டுக்கான மனிதவள முகாமைத்துவம் பற்றிய ஒரு பகுப்பாய்வு கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

### மனித வள நிலைமைப் பகுப்பாய்வு
### 2018/2019 பகுப்பாய்வு

| | நிரந்தர | ஒப்பந்த | கருத்திட்டங்கள் | சேவை ஒப்பந்தப்புகள |
|---|---|---|---|---|
| ஊழியர் எண்ணிக்கை | 152 | 125 | 30 | 10 |
| ஆண்கள் | 89 | 54 | 15 | 06 |
| பெண்கள் | 63 | 71 | 15 | 04 |

### 2018 / 2019 சேவையை கைவிட்டுச் செல்லல்

| | ஓய்வுபெறல | இராஜினாமா | சேவையைக் கைவிட்டுச் செல்லல |
|---|---|---|---|
| ஆண்கள் | 08 | 18 | |
| பெண்கள் | 07 | 24 | 01 |
| மொத்தம் | 15 | 42 | 01 |
| வீதாசார | 26 | 72 | 02 |

### ஊழியர்களின் வயதுப் பகுப்பாய்வு

| | 20-29 வயது | 30-39 வயது | 40-49 வயது | 50-59 வயது | 60-69 வயது |
|---|---|---|---|---|---|
| ஆண்கள் | 26 | 40 | 42 | 45 | 11 |
| பெண்கள் | 42 | 23 | 34 | 47 | 07 |
| மொத்தம் | 68 | 63 | 76 | 92 | 18 |
| வீதாசார | 21% | 20% | 24% | 29% | 6% |

### பால் நிலையின் பிரகாரம் பகுப்பாய்வு

| | ஆண் | பெண் |
|---|---|---|
| ஊழியர் எண்ணிக்கை | 164 | 153 |
| வீதாசாரம் | 52% | 48% |

### ஊழியர்களின் ஆட்சேர்ப்பு

சங்கத்தின் பிரதான சொத்து மனித வளம் அல்லது ஊழியர்கள் ஆகும். சங்கத்தில் காணப்படுகின்ற ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக சம்பந்தப்பட்ட சேவையின் பொருட்டு தேவைப்படுகின்ற கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள், வயது, பால்நிலை ஆகிய அளவுகோல்களின் மீது அடிப்படையாக அமைந்து குறிப்பிட்ட நபர்களைத் தெரிவு செய்தல் பௌருசோதயப் பிரிவினால் உபாயமார்க்க ரீதியில் மேற்கொள்ளப்படுகின்றது. உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள சகலருக்கும் சம்பந்தப்பட்ட பதவிகளுக்கான பயிற்சி மற்றும் அபிவிருத்தி, சம்பளம் மற்றும் ஏற்புடையதான அனுகூலங்கள் செலுத்தப்படுகின்றன.

### பயிற்சி மற்றும் அபிவிருத்தி

ஊழியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி மற்றும் அபிவிருத்தி மூலம் அவர்களின் அறிவு மற்றும் திறன் என்பன விருத்தியடைவதோடு தனிநபர் அபிவிருத்தியும் இடம்பெறுகின்றது. 2018/2019 ஆம் ஆண்டில் பௌருசோதயப்

பிரிவினால் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 10(உள்ளக மற்றும் வெளி) நடத்தப்பட்டுள்ளன.

**செயலாற்றுகை அளவுகோல்கள்(KPI)**

சர்வோதய இயக்கம் வருடம் தோறும் படிப்படியாக முன்னகர்வது மரபுரீதியான வகையில் அல்ல.. சங்கத்தின் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள் என்பவற்றுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் இற்றைப்படுத்தப்பட்டு சாதகமான திசையை நோக்கி நாம் பயணித்து வருகின்றோம். மக்கள் அமைப்புகள் செயற்படுத்தப்படும்போது அவற்றுக்கான மனித வளமானது ஏனைய அனைத்தையும் விட முக்கியமானதாக அமைகின்றது. அதன் பிரகாரம் மனிதவள செயலாற்றுகையை மிகவும் பயனுள்ளதாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் அமைத்துக் கொள்ளும் பொருட்டு இலங்கைத் தேசிய சர்வோதய சமாதான சங்கத்தினால் 2017 - 2018 ஆம் ஆண்டில் செயலாற்றுகை அளவுகோல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இந்த செயலாற்றுகை மதிப்பீடுகளின் மூலம் சங்கத்தின் ஊழியர்கள் தமது கடமைகளை முறையாகவும் சரியாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்கு தூண்டப்படுவதோடு மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட மாவட்டம் எதிர்வரும் வருடங்களிலும் தாம் பெற்றுக்கொண்ட இடத்தினை தக்கவைத்துக் கொள்வதற்காக பணியாற்றுவதோடு ஏனைய மாவட்டங்கள் தமது மாவட்டத்தினை முதலாம் இடத்திற்குக் கொண்டு வருவதற்காக அனைத்து செயற்பாடுகளையும் சிறப்பாக மேற்கொள்வதன் ஊடாக சங்கத்தின் வினைதிறன் மற்றும் ஆக்கவிளைவு என்பன அதிகரிப்பதோடு அதனூடாக சேவைகளின் தரம் பலமடையும். இதன்போது அனைத்து மாவட்டங்களுக்கும் 75% வீதமான தடைதாண்டல் வீதாசாரம் பெற்றுக்கொடுக்கப்பட்டதோடு எதிர்வரும் வருடத்தில் 75% வித தடைதாண்டலை அடைகின்ற அல்லது கடந்து செல்கின்ற மாவட்டங்களுக்கு தடைதாண்டல் விகிதத்தை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. தடைதாண்டல் விகிதத்தை அடைந்து கொள்ள முடியாத மாவட்டங்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின்போது தெளிவான விடயம் யாதெனில், அவர்களுடைய ஊழியர் எண்ணிக்கை குறைவாக காணப்படுதல், புதிய ஊழியர்கள் மாவட்டத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுதல் அல்லது வெள்ளம் அல்லது மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களின் காரணமாக தடைதாண்டலை அடையமுடியவில்லை என்பதாகும். எனவே எதிர்வரும் வருடத்தில் தடைதாண்டல் விகிதத்தை அடைந்துகொள்ள முடியாத மாவட்டங்களுக்காக தடைதாண்டல் வீதத்தை குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**ஊழியர்களுக்கான அனுகூலங்கள் மற்றும் நலனோம்பல்**

- சங்கத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் கல்வி பெறுகின்ற 183 பிள்ளைகளுக்காக 2018/19 ஆம் ஆண்டில் கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன.
- பாடசாலை மாணவர்களுக்கு சமூகத்தில் மக்கள் முகங்கொடுக்கின்ற சிக்கல்களையும் பிரச்சினைகளையும் இனங்காண்பதற்கும் அப் பிரச்சினைகளுக்கு மக்களுடன் இணைந்து தீர்வுகளை கண்டறிவதன் பொருட்டு வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கும் முகமாக கலாநிதி ஏ.ரீ. ஆரியரத்ன அவர்களின் எண்ணக்கருவின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் சங்கத்தின் ஊழியர்களின் பிள்ளைகளை இணைத்து சர்வோதய சிறுவர் கூட்டு உருவாக்கப்படுதல்.
- 2019.01.01 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் ஒட்டுமொத்த ஊழியர்களுக்கும் சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டு ஊழியர்கள் தூண்டப்படுதல்.
- மேல்மட்ட முகாமைத்துவ அங்கத்தவர்களுக்கு வெளிநாட்டு விஜயங்கள் வழங்கப்படுதல்.
- தொலைபேசி பட்டியல்கள், எரிபொருள் மற்றும் பராமரிப்பு செலவினங்கள், நிறுவனம்சார் சேவைகள் சார்பாக போக்குவரத்துச் செலவுகள் போன்றவற்றை மீளளிப்புச் செய்தல்
- சுய விருப்பத்துடன் சங்கத்தில் இணைகின்ற வெளிநாட்டவர்களின் பங்களிப்பில் சங்கத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்களின் பிள்ளைகளுக்காக ஆங்கில மொழிப் பயிற்சி செயலமர்வுகளை நடாத்துதல்.

சமூக, பொருளாதார, அரசியல் சவால்களுக்கு முகங்கொடுத்தும், இயக்கத்தில் காணப்படுகின்ற நன்நெறி விழுமியங்களைப் பாதுகாத்தும், ஆளணி முகாமைத்துவத்தின்போது மனிதநேயக் கொள்கையுடன் மனித வள முகாமைத்துவம் மேற்கொள்ளப்படுகின்றது. மனித வள முகாமைத்துவத்தின்போது சர்வோதய ஊழியர்களுக்கான ஆட்சேர்ப்பினை பெண் மற்றும் ஆண் என்ற வகையில் சமநிலையுடன் பேணிச் செல்வதற்கு














சாந்தி சேனா பிரிவு

## சாந்தி சேனாப் பிரிவு

சமூக அபிவிருத்திச் செயற்பாட்டின்போது இளைஞர்கள் முதன்மையான பணியினை நிறைவேற்றுகின்றனர் அல்லது நிறைவேற்ற வேண்டுமென சர்வோதயம் எதிர்பார்க்கின்றது. பெரும்பாலும் நடைமுறையிலுள்ள சமூக முறையினுள் அவர்கள் தனிமைபடுத்தப்படுவதனைக் காரணமாகக்கொண்டு தமது அடையாளத்தைப் பாதுகாப்பதற்காக அவர்கள் பெருமுயற்சியெடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. அம்முயற்சிகள் வெற்றியடையும் பட்சத்தில் திருப்தியடைவதோடு அவை தோல்வியடையும் பட்சத்தில் எழுகின்ற மனவிரக்தி நிலைமைகளின் காரணமாக பாரிய சமூகப் பேரழிவு ஏற்பட வாய்ப்புள்ளது.

ஆரம்பத்திலிருந்து சர்வோதயம் இது தொடர்பாக புரிந்துகொண்டு செயற்பட்டதன் பெறுபேறாக இளைஞர்களுக்கான ஒரு வேலைத்திட்டமாக சர்வோதய சாந்திசேனாப் பிரிவு உருவானது. 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டு சர்வோதய சங்கத்துடன் இணைந்த ஒரு சுயாதீன நிறுவனமாக சாந்திசேனா பிரிவு பணியாற்றி வருகின்றது.

நோக்கு : ஆளுமை விருத்தி, உண்மையான அரசியல் விழிப்புடன்கூடிய இளைஞர்களின் ஊடாக நியாயமான ஒரு சமூகம்

நோக்குப் பணி : அரசியல் விழிப்புணர்வு, சகவாழ்வு பற்றிய ஆரோக்கியமான மனோபாவம்,பொருளாதார வலுவூட்டல் மற்றும் ஆற்றல் விருத்தி மூலம் இலங்கையின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்பதற்குப் பொருத்தமான இளம் தலைமைத்துவத்தைக் கட்டியெழுப்புதல்

**2017 - 2020 மூலோபாய பரிமாணங்கள்**

01. ஆளுமை விருத்தியின் மூலம் இளம் தலைமைத்துவம்
02. அரசியல் விழிப்புணர்வுடன் கூடிய இளம் தலைவர்கள்
03. தேசிய மீளிணக்கம் மற்றும் மதங்களுக்கும் இனங்களுக்கும் இடையிலான அமைதி மற்றும் நல்லிணக்கம்
04. இளைஞர்களுக்கான நிலைபேறான பொருளாதாரம்

### நடைமுறைபடுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

| தொனிப்பொருள் | அதிகாரப் பிரதேசம் | செயற்பாடுகள் |
|---|---|---|
| இளம் தலைமைத்துவ அபிவிருத்தி அரசியல் விழிப்புணர்வுடனான இளம் தலைவர்கள | களுத்துறை, பதுளை, மாத்தறை, காலி, மாத்தளை, பதவிய | தலைமைத்துவம் மற்றும் ஆளுமை விருத்தி பயிற்சிகள |
| | அநுராதபுரம், மொனறாகலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி | மாவட்ட இளைஞர் வட்டக் கூட்டங்கள |
| இளம் தலைமைத்துவ அபிவிருத்தி | களுத்துறை | அறநெறி பாடசாலை மாணவத் தலைவர்களுக்கான தலைமைத்துவம் மற்றும் ஆளுமை விருத்திப் பயிற்சிகள் |
| | றுகுணு பல்கலைக்கழகம் | தலைமைத்துவம் மற்றும் சமூக அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடல்கள் |
| சமாதானமும் நல்லிணக்கமும் | கண்டி | தனி மதத் தலைவர் கலந்துரையாடல்கள், மதங்களுக்கிடையிலான மதத் தலைவர்களின் கலந்துரையாடல்கள், மதம்சார் தொழில்வாண்மைக் கலந்துரையாடல்கள் |
| | களுத்துறை, கண்டி, புத்தளம், மாத்தளை, குருநாகல், திருகோணமலை,மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, கேகாலை, மொனறாகலை, இரத்தினபுரி | மோதல்களைத் தீர்த்தல் மற்றும் சமாதானம் கட்டியெழுப்பப்படுதல் பற்றிய பயிற்சிகள், தலைமைத்துவம் மற்றும் ஆளுமை விருத்தி பயிற்சிகள் |
| | களுத்துறை, கண்டி, புத்தளம், கேகாலை, மொனறாகலை, அநுராதபுரம், காலி, கம்பஹ | மோதல்களைத் தீர்த்தல் மற்றும் சமாதானம் கட்டியெழுப்பப்படுதல் தொடர்பாக பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிப்பதற்கான வேலைத்திட்டம |

| | | |
|---|---|---|
| | ஆசிய நாடுகள் | URI மூன்றாவது ஆசிய மாநாடு |
| | மட்டக்களப்பு, அம்பாரை, திருகோணமலை, காலி,பதுளை,நுவரெலியா | இளம் மதத் தலைவர்களுக்கான பயிற்சி |
| | மாத்தறை, திருகோணமலை, கிழக்குப் பல்கலைக்கழகம், ருகுணு பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், இரத்தினபுரி, யாழ் பல்கலைக்கழகம், சப்ரகமுவ பல்கலைக்கழகம், அம்பாறை | இளைஞர் பரிமாற்று நிகழ்ச்சித்திட்டங்கள் |
| சமாதானமும் நல்லிணக்கமும் | அநுராதபுரம்,பொலன்நறுவை, களுத்துறை | கிராமிய கருத்தாடல் நிகழ்ச்சிகள், பிரதேச கருத்தாடல் நிகழ்ச்சிகள் |
| | மன்னார், ஹட்டன் | மதங்களுக்கிடையிலான குழுக்களைத் தாபித்தல் |
| | இந்தியா, மலேசியா,பங்களாதேஷ், | மாநாடுகள் மற்றும் நிறைவேற்றுக் குழுக் கூட்டங்கள |
| | கல்முனை | சகவாழ்வுக்கான இல்லம், பஸ் தரிப்பு நிலையம் நிர்மாணிக்கப்படுதல் |
| இளைஞர்களுக்காக நிலைபேறான பொருளாதாரம் | அனைத்து மாவட்டங்களும் | இளைஞர்களுக்காக சமூக புத்தாக்க சவால் பற்றிய அமர்வுகள் தெரிவு செய்யப்பட்ட குழுக்களுக்கான பயிற்சிகள் |

**பெறுபேறுகள்**

01. 220 பேருக்கும் அதிகமான இளைஞர் குழுவை சுய ஒழுக்கம் மற்றும் தலைமைத்துவத்துடன் கூடிய குழுவாக வலுவூட்டி சமூக மயப்படுத்துவதன் ஊடாக நீண்டகால சமூக அபிவிருத்திச் செயன்முறைக்கு அவர்களின் பங்களிப்பு கிடைக்கப்படுதல்.
02. சர்வோதயம் மற்றும் சாந்தி சேனா நிகழ்ச்சித்திட்டத்தை சூழ சர்வோதய கிராமங்களில் போலவே பல்கலைக்கழக மட்டத்திலும் ஏனைய துறைகளிலும் பெருமளவிலான இளைஞர் குழுவினர் அணிதிரளுதல்.
03. கண்டிப் பிரதேசத்தில் மத ரீதியாக ஏற்படக்கூடிய மோதல்களை கட்டுப்படுத்துவதற்காக தலையிடுதல் மற்றும் எதிர்காலத்தில் அத்தகைய நிலைமைகள் ஏற்படாதிருப்பதற்கு ஒருமுறையிலை உருவாக்குவதற்காக ஆட்களை வலுவூட்டுதல்.
04. மோதல்களைத் தணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் 68 மதத் தலைவர்களைக் கொண்டமைந்த ஒரு குழுவை மத ரீதியான பிரச்சினைகள் ஏற்படக்கூடிய பிரதேசங்களில் சகவாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல்.
05. நடைமுறையில் உள்ள சமூக அரசியல் சூழ்நிலை பற்றிய சமநிலையான மற்றும் ஆழமான கூருணர்வைக் கொண்டுள்ள இளைஞர் குழுவொன்றை சமூகமயப்படுத்துவதன் ஊடாக சிறந்த எதிர்காலத்தின் பொருட்டு சமூக சொல்லாடலை உருவாக்குதல்.
06. பல்லின பல்மத இளைஞர் குழுக்களுக்கு இடையில் சகவாழ்வு/அமைதி என்பவற்றை மேம்படுத்துதல்.
07. நாட்டில் காணப்படுகின்ற சிக்கல்களை இன அல்லது மத ரீதியான அடிப்படையில் புறம்பாகத் தீர்த்துக்கொள்ள வேண்டியவைகளல்ல எனவும் அதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதும் கலந்துரையாடல்களில் எழுதல்.
08. சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்து புத்தாக்கச் செயன்முறையில் பிரவேசிப்பதற்கு 2624 இளைஞர் யுவதிகளை வலுவூட்டுதல்.

**ஒட்டுமொத்த சர்வோதய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக பங்களித்த விதம்**

01. சர்வோதய வேலைத்திட்டத்தை சூழ பல்வேறுபட்ட துறைகளில் புதிய இளைஞர் குழுக்களை அணிதிரளச் செய்தல் மற்றும் அவர்களின் ஊடாக சர்வோதயத்தின் செய்தியை சமூகமயப்படுத்தல்
02. இலங்கையில் சகவாழ்வினை மேம்படுத்துவதற்காக சர்வோதய செயன்முறையை வலுவூட்டுதல் மற்றும் அதன்பொருட்டு பரந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்













**விஷ்வ நிகேதன்**

## விஷ்வ நிகேதன்

புலனுணர்வு, பொருளாதாரம் மற்றும் அதிகாரம் ஆகிய மூன்று விடயங்களையும் அடிப்படையாகக் கொண்ட சர்வோதய வேலைத்திட்டத்தின் ஆட்புலனுணர்வினை நடைமுறைப்படுத்துவதற்காக விஷ்வ நிகேதன் உதவியாக அமைகின்றது.

பரிவு, கருணை, அன்பு ஆகிய பண்புகளின் மூலம் தனிப்பட்ட மற்றும் கூட்டு ஆன்மீக புலனுணர்வினை வளர்த்து மனிதன், தாவரங்கள் மற்றும் விலங்கு உலகினைப் பாதுகாக்கின்ற தேசத்திற்காக சர்வோதய இயக்கத்தின் தோழமை அமைப்பாகிய விஷ்வ நிகேதன் சமாதான இல்லம் ஐந்து மூலோபாய பரமாணங்களின் ஊடாக தாயின் கருவிலிருந்து வயோதிபர் வரை பரந்து செல்கின்ற வேலைத்திட்டங்களை வரிசைப்படுத்துவதன் மூலம் தனித்துவமான பங்களிப்பினை வழங்குகின்றது.

### 1. பரிவின் விஞ்ஞான ரீதியான தோற்றப்பாடு

### 1.1 தாய் பதவிக்கான அறவழி பிரவேச வேலைத்திட்டம்

புத்த சமயத்தின் புலனுணர்வு பற்றிய கற்பித்தல்கள் மற்றும் கரு உளவியலின் புதிய கண்டுபிடிப்புகள் ஆகிய இரண்டினதும் கலப்பினத்தில் உருவாகிய கருவில் 2 பில்லியன் நியூரான் சுற்றமைப்பு இடம் பெறுவதற்குத் தேவையான ஆன்மீக, உடல், உள, பௌதீக மற்றும் சுற்றாடல் ரீதியான சுற்றுச்சூழல் உருவாக்கம் பற்றிய புரிதலை கர்ப்பிணி தாய்மார்களுக்கும் தந்தைமார்களுக்கும் வழங்குகின்றது. கருவின் வளர்ச்சிக் கட்டங்கள் தொடர்பாகவும் தாயின் நட்சிந்தனைகள், உள்ளுணர்வுகள் மற்றும் கருவுடன் மேற்கொள்ளப்படுகின்ற தொடர்பாடல் கருவிலுள்ள குழந்தையின் மூளையில் நியூரான் படத்தினை பூர்த்தி செய்வதில் செல்வாக்குச் செலுத்தும் விதம் தொடர்பாக விஞ்ஞானரீதியான தோற்றப்பாட்டில் விவரிக்கப்படுகின்றது. தாய்மார்களின் தியானம், யோகா பயிற்சி, குழந்தை தாலாட்டுப் பாடல்கள் மற்றும் சுற்றாடலை நினைவுகூறல் போன்ற நடைமுறை ரீதியான பயிற்சிகளை அன்றாட வாழ்க்கைமுறையுடன் தொடர்புபடுத்திக்கொண்டு குழந்தையுடன் தொடர்பாடலில் ஈடுபடுவதற்கு பெற்றோர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். குழந்தைகள் பிறந்ததன் பின்னர் 18 வருடங்கள் பூராக சிறுவர் அபிவிருத்திக் கட்டங்களில் இடம்பெறுகின்ற உடல் மற்றும் உள ரீதியான மாற்றங்கள் தொடர்பாக அறிவினைப் பெற்றுக்கொடுத்து முழுமையான ஆளுமையுடன்கூடிய ஒரு பிள்ளையை வளர்ப்பதற்கு அன்பு மற்றும் அகிம்சை ஆகிய பெற்றோரின் வகிபங்கு பற்றிய அறிவின் மூலம் பெற்றோர்கள் வலுவூட்டபடுகின்றனர். நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 352 பெற்றோர்கள் பங்குபற்றினர்.

#### 1.2 பிள்ளைகளுக்கான 3S ஆன்மீக நலன் நிகழ்ச்சித்திட்டம்

"தாம் தேடிச் சென்று, சமூகப் பணியில் ஈடுபட்டு, சுற்றாடலை குணப்படுத்தி" எனும் தொனிப்பொருளின் கீழ் 3 - 18 வயதுக்கு இடைப்பட்ட நகர்ப்புற குடும்பங்கள், பாடசாலை மற்றும் சமுதாயச் சுற்றுச்சூழலில் வாழ்கின்ற பல்வேறுபட்ட சமூக மட்டங்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற பிள்ளைகளுக்கான ஆன்மீக நலன் நிகழ்ச்சித்திட்டமானது மாதாந்தம் இடம்பெற்று வருகின்றது. தமது சிந்தனைகள் மற்றும் உணர்வுகள் அருகிலுள்ள மனித சமுதாயத்தின் மீதும் விலங்கினங்கள் மற்றும் தாவரங்கள் மீதும் தாக்கம் ஏற்படுத்துகின்றது என்பதைப் புரிந்துகொண்டு மானுட கருணையுடன் விலங்கின மற்றும் தாவர உலகை நேசிக்கும் வாழ்க்கை முறை தொடர்பாகவும் அஹிம்சை மற்றும் சமாதானம் என்பவற்றை மதிக்கவும் பிள்ளைகளை ஊக்கப்படுத்துகின்றது. ஒவ்வொரு மாதமும் தனித்துவமான தொனிப்பொருளை மையமாகக்கொண்டு தியானம், விழிப்புணர்வு, பரிவு என்பன மேம்படுத்தப்படுகின்ற செயற்பாடுகள் மற்றும் யோகா பயிற்சிகள் என்பவற்றைக்கொண்டு வேலைத்திட்டம் வளம் பெறுகின்றது.

| நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்ற மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகள | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்கேற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| புனித தோமஸ் கல்லூரி, மியுசியஸ் கல்லூரி,லோரன்ஸ் கல்லூரி, விசாகா கல்லூரி, புனித லோரன்ஸ் கல்லூரி, புனித திருக்குடும்ப கல்லூரி களுத்துறை மற்றும் தெஹிவல, சுஜாதா கல்லூரி, றோயல் கல்லூரி, பிஷொப் கல்லூரி, பிரின்ஸ் ஆப் வேல்ஸ் கல்லூரி, பிரிசஸ் ஆப் கல்லூரி, அமெரிக்க சர்வதேச பாடசாலை | 12 | 193 |

1.3 விழிப்புநிலை(mindfulness) பாடசாலைக்கு

பரீட்சைகளை மையமாகக்கொண்டு போட்டித்தன்மையுடன்கூடிய பாடசாலைக் கல்வி முறையின் காரணமாக கடுமையான உள அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ள பாடசாலை மாணவர்கள் சார்பாக விழிப்புநிலை பாடசாலைக்கு எனும் நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. பாடசாலை பாடத்திட்டத்தில் சொல்லாடலுக்கு உள்ளாகாத பிள்ளைகளின் உளரீதியான நல்வாழ்வு, மனக்கிளர்ச்சி மற்றும் அழுத்த முகாமைத்துவத் திறன்களை கைப்பற்றிக் கொள்வதற்குத் தேவையான பின்னணி

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் திறக்கப்படுகின்றது. வாழ்க்கையின் சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்கக்கூடிய சமநிலையான ஆளுமையை உருவாக்கிக்கொள்வதற்காக சுய கருணை மற்றும் விழிப்புநிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட சமூக மற்றும் மனக்கிளர்ச்சித் திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கு வழிகாட்டல் இதன் மூலம் வழங்கப்படுகின்றது.

- ❖ 1351 பாடசாலை மாணவர்களை பங்கேற்கச் செய்து 5 நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

**1.4 விழிப்புநிலையை அடிப்படையாகக் கொண்டு அழுத்தத்தைக் குறைத்தல்**

நிதமும் ஏதேனும் ஒரு விடயத்தை மேற்கொண்டு அல்லது ஏதேனும் ஒரு விடயத்தை சீர்செய்து அழுத்தத்தின் காரணமாக உடல் மற்றும் உள ரீதியான நலன் பாதிக்கப்பட்ட நபர்களுக்குப் பதிலாக விழிப்புநிலை, அறிவு என்பவற்றுடன்கூடிய ஆரோக்கியமான வாழ்க்கை முறையின் பொருட்டு அடித்தளத்தை இடுகின்ற உடல் மற்றும் உளம் என்பவற்றை பாதுகாக்கும் வாழ்வதற்கான கலை நிகழ்ச்சித்திட்டம் பல்வேறுபட்ட இலக்குக் குழுக்களின் பொருட்டு நடைமுறைபடுத்தப்பட்டது. தியானப் பயிற்சிகள், விழிப்புநிலை யோகா, விழிப்புநிலை செவிமடுத்தல், அழுத்தத்திற்கான விஞ்ஞான ரீதியான தோற்றப்பாட்டினை அறிமுகப்படுத்துதல், விழிப்புநிலை நினைவுகூறல் மூலம் சிந்தனைகளையும் மனக்கிளர்ச்சிகளையும் இனங்காணுதல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களின் கலப்பின் மூலம் தமது உள்ளம் மற்றும் உடல் என்பவற்றுக்கு இடையில் சமநிலையான தொடர்பினை மேம்படுத்துவதற்கு பங்கேற்பாளர்களை ஆற்றுப்படுத்துவதற்கு நிகழ்ச்சித்திட்டத்தினால் முடிந்தது.

- ❖ 12 நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்ற மாணவர்களின் எண்ணிக்கை 193 ஆகும்.

**1. பரிவு மையமாகக்கொள்ளப்பட்ட சமூகப்பணி**

**2.1 துன்புறுத்தல்களுக்கு உள்ளான பாதிக்கப்பட்டோரின் உள்ளங்களையும் இதயங்களையும் பரிவின் மூலம் குணப்படுத்துதல்**

துன்புறுத்தல்களின் மூலம் பாதிக்கப்பட்ட, வறுமையால் பிடிக்கப்பட்டுள்ள, பாமர குடும்பங்களிலும் சமுதாயச் சூழல்களிலும் வளர்ந்து நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறுவர்கள் கடுமையான உள அதிர்ச்சியினால் பாதிக்கப்பட்டு துன்பகரமான நினைவுகளுடன் வாழ்ந்து வருகின்றனர். அத்தகைய துன்புறுத்தல்களுக்கு உள்ளான, பாதுகாப்பும் அரவணைப்பும் தேவைப்படுகின்ற சிறுவர்களுக்காகவும், பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதனால் கருத்தரித்துள்ள சிறுமிகளுக்காகவும் பாதிக்கப்பட்டோருக்கான குணமடைதல் கலை எனும் நிகழ்ச்சித்திட்டம் அமுலில் உள்ளது. இதிலே பல்வேறுபட்ட கலை, ஆக்கத்திறன் மற்றும் உளவியல் சிகிச்சை செயற்பாடுகளின் மூலம் பிள்ளைகளுக்கு தமது வேதனையுடன்கூடிய மனக்கிளர்ச்சி நிலைகளை விடுவித்து தமது உள்ளங்களையும் இதயங்களையும் குணப்படுத்திக் கொள்வதற்கும் அவர்களுக்குள் காணப்படுகின்ற நம்பிக்கையீனங்களை எதிர்பார்ப்புகளாக மாற்றியமைப்பதற்குமான அடிப்படை அத்திவாரம் இதன்போது இடப்படுகின்றது.

- ❖ சுவசெத, மாசெவன சிறுவயது தாய்மார்கள், சுவசெத சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் பாதுகாப்பினையும் அரவணைப்பையும் பெற்று வருகின்ற 135 சிறுவர்கள் என்போரைச் பங்கேற்கச் செய்து 6 நிகழ்ச்சி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

2.2 சிறுவர் மற்றும் வயதுவந்த சிறைச்சாலை கைதிகளின் உள்ளங்களை பரிவின் மூலம் மீளமைத்தல்

2.2.1 குணமடைதல் பற்றிய கலை-வட்டரெக்க இளவயது குற்றவாளிகளுக்கு உள ஆன்மீக நலன் நிகழ்ச்சித்திட்டம்.

2.2.2 உள ஆன்மீக நலன் நிகழ்ச்சித்திட்டம் - வெலிக்கடை சிறைச்சாலை

( 1625 கைதிகளின் பங்கேற்புடன் 9 நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன)

3. உள்ளே நலன் வெளியில் சமாதானம்- குணப்படுத்தும் கலை

3.1 மாதாந்த தியான நிகழ்ச்சி, மாதாந்த அறப் போதனை, சதகம் விமசும

- ❖ 1026 பெரியோர்களின் பங்கேற்புடன் 37 நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

**ஒட்டுமொத்த சர்வோதயத்தின் தத்துவம் மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான விஷ்வ நிகேதனின் பங்களிப்பு.**

ஒட்டுமொத்த மனிதச் சமுதாயத்தின் விழிப்பினை நோக்கமாகக் கொண்டுள்ள சர்வோதய தத்துவத்தில் மனிதனின் உள்ளக சமாதானத்தை வளர்க்கும் பணியின் நிமித்தம் பங்களிப்பு நல்குதல் விஷ்வ நிகேதன் சமாதான நிலையத்தின் மூலம் கடந்த வருடத்திலும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.











வெளிக்கள தொழிற்பாட்டுப் பிரிவு

# வெளிக்கள தொழிற்பாட்டுப் பிரிவு

## 01. நிறைவேற்றுச் சுருக்கம்

சமூக ரீதியான தேவைகளின் பிரகாரம் பல்வேறுபட்ட பரீட்சித்தல்களின் ஊடாக பரிணாமம் அடைந்து வந்த சர்வோதய சிரமதான சங்கமானது வளர்ந்து வரும் சமூக வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டம், மாவட்ட நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் வெளிக்கள சேவைகள் என்பவற்றை மேலும் வலுவூட்டுவதனை நோக்கமாகக் கொண்டு 2015 பெப்ரவரி மாதம் வெளிக்கள தொழிற்பாட்டுப் பிரிவினைத் தாபித்தது.

தொழில்நுட்ப வலுவூட்டல் மற்றும் பொருளாதார வலுவூட்டல் என்பவற்றை உள்ளடக்கியதாக ஏனைய துறைகளின் மூலமும் நிபுணத்துவ மற்றும் சுயாதீன அலகுகளின் மூலமும் மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஆதரவு வழங்கி 26 சர்வோதய மாவட்ட நிலையங்களுக்கான 325 பிரதேச நிலையங்களின் ஊடாக 15000 கிராமங்களை ஆன்மீக, நல்லொழுக்க, கலாசார, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியில் வளமான அபிவிருத்திப் பிரவேசத்திற்கு ஆற்றுப்படுத்துதல் மற்றும் சர்வோதயத்தின் சேவைகளை கிராமத்திற்குக் கொண்டு செல்லுதல் என்பன வெளிக்கள தொழிற்பாட்டுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு உருவாக்கப்படுகின்ற கிராமங்கள் ஆன்மீக, நல்லொழுக்க, கலாசார, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ஆகிய ஆறு துறைகளில் முழுமையடைந்ததும் தன்னிறைவானதுமான கிராமங்களாக படிப்படியாக மாற்றியமைக்கப்படுவதோடு அதன் பொருட்டு சர்வோதயமானது முழுமையான வழிகாட்டல்களையும் ஆதரவினையும் பெற்றுக்கொடுக்கும்.

இதற்காக இலங்கையின் 25 மாவட்டங்களும் உள்வாங்கப்படுகின்ற வகையில் 26 சர்வோதய மாவட்டங்களில் எமது சேவைகள் பரந்தளவில் மேற்கொள்ளப்படுவதோடு சேவைகளை நடைமுறைப்படுத்தும்போது மாவட்ட மற்றும் பிரதேச பதவியணியை நெறிப்படுத்துதல், வழிகாட்டுதல், நிபுணத்துவ அறிவு வழங்கப்படுதல், ஆற்றல் விருத்தி முகாமைத்துவ பயிற்சிகளைத் திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல், மீளாய்வு மதிப்பீடுகள் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் என்பன வெளிக்கள தொழிற்பாட்டுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்போது வெளிக்கள தொழிற்பாட்டுப் பிரிவானது சர்வோதய சங்கத்திற்கான 2018 – 2028 மூலோபாயத் திட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் பத்துவருடங்களுக்கான இலக்கு நோக்கங்களை முதலாகக் கொண்டு சிரமதான சங்கங்கள், தேசோதயம், சமுதாய அபிவிருத்தி, சமுதாயக் கல்வி மற்றும் வள அபிவிருத்தி ஆகிய பிரதான ஐந்து பிரிவுகளின் கீழ் மாவட்ட சேவையாளர்களுக்கு தேவையான வழிகாட்டல்களைப் பெற்றுகொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

### சமுதாயக் கல்வியும் சமுதாய அபிவிருத்தியும்

ஆன்மீகம், நல்லொழுக்கம், கலாசாரம், சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ஆகிய ஆறு துறைகளினது அபிவிருத்தியின் பொருட்டு சமுதாயக் கல்வி மற்றும் சமுதாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் உருவாக்கப்பட்டு அவை நிதி ஏற்பாடுகள் இன்றியும் விசேட கருத்திட்டங்களின் கீழும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

கடந்த ஒரு வருட காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகள் அற்ற நிகழ்ச்சித்திட்டங்கள் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 17இன் இலக்குகளை பூர்த்தி செய்வதற்கு பங்களிப்பு நல்கியுள்ள விதம் கீழே தரப்பட்டுள்ள குறிப்பின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

| இலக்கம் | நிகழ்ச்சித்திட்டம் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | வறுமையை ஒழித்தல் | 118 | 950 |
| 02 | உணவுப் பாதுகாப்பு | 115 | 4025 |
| 03 | ஆரோக்கியமான சுகாதார நிகழ்ச்சித்திட்டங்கள் | 240 | 2650 |
| 04 | தரமான கல்வி | 508 | 3677 |
| 05 | பால்நிலை | 58 | 1160 |
| 06 | சுத்தமான நீர் துப்பரவேற்பாடு | 35 | 880 |
| 07 | பொருத்தமான தொழில் வாய்ப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தி | 23 | 345 |
| 08 | வேறுபாடுகளை(சமயின்மைகளை) குறைத்தல் | 25 | 263 |
| 09 | நிலைபேறான உற்பத்தி மற்றும் நுகர்வு | 47 | 1635 |
| 10 | வானிலை | 48 | 7200 |
| 11 | நீர்வாழ் உயிரினங்களின் பாதுகாப்பு | 47 | 253 |
| 12 | சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டங்கள் | 52 | 1735 |
| 13 | சமாதானம், நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள் | 30 | 750 |
| 14 | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் சார்பாக பங்காண்மை | 47 | 1250 |
| 15 | ஆன்மீக அபிவிருத்தி | 72 | 2300 |
| | மொத்தம் | 1465 | 29073 |

**மாவட்ட வள அபிவிருத்தி**

சர்வோதய தாய் சங்கத்தின் நிதிசார் ஸ்திரத்தன்மையை வலுவூட்டுவதற்காக சர்வோதய மாவட்ட நிலையங்களில் நிதிசார் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதனையும் வலுவூட்டுவதனையும் நோக்கமாகக்கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் காணப்படுகின்ற வளங்களையும் ஆற்றல்களையும் கருத்திற்கொண்டு வருமான ஈட்டல் கருத்திட்டங்களுக்கான தொழில்முயற்சித் திட்டங்களைத் தயாரித்துக் கொடுப்பதற்கு வழிகாட்டுவதும், கல்வியினைப் பெற்றுக்கொடுப்பதும் வெளிக்கள தொழிற்பாட்டுப் பிரிவின் வழிகாட்டுதலின் கீழ் மேற்கொள்ளப்படுவதோடு மேற்படி கருத்திட்டங்களுக்கான சாத்திய வள ஆய்வின் பின்னர் நடைமுறைப்படுத்துவதற்கான இயலுமையுள்ள கருத்திட்டங்களுக்குத் தேவையான நிதி வசதிகளை பெற்றுக்கொடுப்பதும் வழிகாட்டுவதும் மேற்கொள்ளப்படுகின்றது. அதேவேளை தற்போது ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற கருத்திட்டங்களின் வினைத்திறன், கொள்ளளவு மற்றும் ஆக்க விளைவு என்பவற்றை மேற்கொண்டும் பேணிச் செல்வதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் வள அபிவிருத்திக்குத் தேவையான கூட்டாண்மைகளை கருத்திட்டங்களின் சார்பாக இணைப்பாக்கம் செய்தல் என்பன எமது செயற்பொறுப்பாகும்.

**விவசாயப் பண்ணை அபிவிருத்தி**

**ஸ்ரீ திஸ்ஸபுர சேதன விவசாயப் பண்ணை**

வடமத்திய மாகாணத்தில் வாழ்கின்ற மக்கள் முகங்கொடுக்கின்ற பிரதான பிரச்சினையாகிய சிறுநீரக நோய்க்குத் தீர்வாகவும், நச்சுக் கலக்காத பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்குத் தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்படுவதும் நோக்கமாகக் கொள்ளப்பட்டு பதவிய ஸ்ரீ திஸ்ஸபுர விவசாய பண்ணையானது 2016 மே மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அது தற்போது 4 ஏக்கர்களைக் கொண்டமைந்த சேதன மரக்கறி மற்றும் பழ வகை உற்பத்தி செய்யப்படுகின்ற விவசாயப் பண்ணையாகவும் சமுதாய கல்விசார் நிலையமாகவும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இங்கே மேற்கொள்ளப்படுகின்ற உற்பத்திகள் கிராம மற்றும் நகர்ப்புற சமுதாயங்களை இலக்காகக் கொண்டு சந்தைக்கு விநியோகிக்கப்படுவதோடு எமது உற்பத்திகளுக்காக இலங்கையில்

ஏற்றுக்கொள்ளப்பட்ட ஸ்ரீ சர்ட் அன்ட் குட் மார்க்கெட் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

**சாலியபுர விவசாயப் பண்ணை**

இது 15 ஏக்கர்களை கொண்டமைந்த ஒரு விவசாயப் பண்ணை என்பதோடு 4 ஏக்கர்களிலான தென்னந் செய்கையும் 4 ஏக்கர்களிலான வயல் செய்கையும் மேற்கொள்ளப்படுகின்ற பண்ணையாக அமைந்துள்ளது. 2018 ஆகஸ்ட் மாதம் இப்பண்ணையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் வெளிக்கள தொழிற்பாட்டுப் பிரிவின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுவது ஆரம்பிக்கப்பட்டதோடு அதன்கீழ் 4 ஏக்கர்களிலான தென்னம் பயிர்ச்செய்கை அபிவிருத்தி செய்யப்படுதல் மற்றும் துணைப் பயிர்கள் அறிமுகப்படுத்தப்படுதல் என்பவற்றின் ஊடாக குறுகியகால மற்றும் நீண்டகால ரீதியில் கடந்த சுமார் ஒரு வருடமாக பண்ணையில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. துணைப் பயிற்செய்கையாக ஒரு ஏக்கரில் கொடித்தோடை செய்கையும் லெமன் க்ராஸ் மற்றும் வாழை செய்கையும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 03. செயற்பாடுகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறுகள்

- ஊழியர்களுக்கான ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் மாற்றமடைந்து வருகின்ற உலகத்திற்குப் பொருத்தமாக அமையக்கூடிய வகையில் ஊழியர்களின் அறிவு, மனோபாவம் மற்றும் ஆற்றல்கள் என்பவற்றினால் முழுமையடைந்த தொழிலாளர்களை உருவாக்குதல்.
- S5 எண்ணக்கருவினை அறிமுகப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் ஊழியர்களின் ஆக்கவிளைவினை மேம்படுத்தி முறையான அலுவலக சுற்றுச்சூழலை உருவாக்குவதற்கான திட்டங்களை வகுத்தல்.
- செயலாற்றுகை அளவுகோல்களை மதிப்பீடு செய்வதன் மூலம் மாவட்ட முன்னோடி ஊழியர்களை உள்ளிட்ட பதவியணி ஊக்கமடைவதன் ஊடாக சேவைகள் மேற்கொள்ளப்படுவதில் வினைத்திறன் மற்றும் ஆக்கவிளைவு என்பவற்றுடன்கூடிய ஊழியர் குழுவினர் உருவாகுதல்.

## 04. ஒட்டுமொத்த சர்வோதயத்தின் தத்துவம் மற்றும் நோக்கங்கள் என்பவற்றை நிறைவேற்றிக்கொள்வதற்கு பங்களிப்பு நல்குதல்

மீளாய்வாண்டில் சர்வோதய வெளிக்கள தொழிற்பாட்டுப் பிரிவானது சர்வோதயத்தின் கிராம சுயராஜ்ஜிய எண்ணக்கருவினை அடிப்படையாகக் கொண்டு வறுமையை மறுதலித்தல், உணவுப் பாதுகாப்பு, ஆரோக்கியமான சுகாதார நிகழ்ச்சித்திட்டங்கள், தரமான கல்வி, பால்நிலை, சுத்தமான நீர் துப்பரவேற்பாடு, பொருத்தமான தொழில் வாய்ப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தி, வேறுபாடுகளைக் குறைத்தல், நிலைபேறான உற்பத்தி மற்றும் நுகர்வு, வானிலை, நீர்வாழ் உயிரினங்களின் பாதுகாப்பு, சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டங்கள், சமாதானம், நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் சார்பாக பங்காண்மை மற்றும் ஆன்மீக அபிவிருத்தி ஆகிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களையும் சிரமதான முகாம்களை நடாத்துதல் மற்றும் விவசாயப் பண்ணை அபிவிருத்தியின் மூலம் சர்வோதயமானது பத்து வகையான அடிப்படை மனிதநேய நோக்கங்களையும் அடைந்து கொள்வதற்கு பங்களிப்பு நல்கி உள்ளது.

கிராமிய சமுதாயத்தினரின் அடிப்படை மனிதநேய தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்து வளமான அபிவிருத்திக்கான பிரவேசத்தினை சமுதாயத்தினரின் சுய சக்தியின் அடிப்படையில் கட்டியெழுப்புவதற்கு வழிகாட்டி தன்னிறைவுடன்கூடிய கிராமங்களை உருவாக்குவது இலங்கையின் முதன்மை மக்கள் இயக்கம் என்ற வகையில் 6 தசாப்தங்களாக எம்மால் வெற்றிகரமாக பரீட்சித்துப் பார்க்கப்பட்டு பெறுபேறுகள் அடையப்பட்டுள்ளன.











**சிரமதான சங்கங்களுக்கான மத்திய நிலையம்**

## சிரமதான சங்கங்கள்

### சர்வோதய சிரமதான சங்கங்களின் மத்தியப் பிரிவு

கிராமிய சமுதாயத்தின் தன்னாதிக்கத்தின் பொருட்டு சுயசக்தி, கூட்டு, சுய நிதியாக்கம் மற்றும் சுயாட்சி முறையில் ஈடுபடுத்தப்படும் செயன்முறையை ஆரம்பித்தல் எனும் தொனிப் பொருளின் கீழ் முறைசாரற்ற வகையில் உருவாகியிருந்த கிராமிய அமைப்புகளை சட்டரீதியான சர்வோதய சிரமாதான சங்கங்களாகத் தாபிக்கும் நோக்கத்தினை நிறைவேற்றிக்கொள்வதற்காகவும், மிகவும் முறையாகவும் நேரடியாகவும் சிரமதான சங்கங்களுடன் இணைவதனை வசதிப்படுத்துவதற்காகவும் சர்வோதய சிரமதான சங்கங்களின் மத்தியப் பிரிவு தாபிக்கப்பட்டது.

சர்வோதய வேலைத்திட்டமானது நிலைபேறான அபிவிருத்தியின் மீது அடிப்படையாக அமைந்த ஒரு வேலைத்திட்டமாகும். அதன்போது கிராமிய மட்டத்தினை பலமான வகையில் கட்டமைத்தலானது சிரமதான சங்கம் எனும் கிராமிய மட்ட அமைப்பு அலகின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. நடைமுறையிலுள்ள சமூகக் கட்டமைப்பில் காணப்படுகின்ற மத்தியமயப்படுத்தப்பட்ட மக்கள் அதிகாரத்தினை சமுதாய அடிப்படையில் கிராமிய மட்டத்தில் பேணிக்கொண்டு சமுதாயத்தின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்ற சிறிய கிராம இராஜ்ஜியப் பிரிவாக சர்வோதய சிரமதான சங்கம் பணியாற்றுகின்றது. அபிவிருத்திக்கான பங்கேற்பு மற்றும் தீர்மானம் மேற்கொள்வதற்கான உரிமை என்பவற்றை சமுதாயத்திற்குப் பெற்றுக்கொடுப்பதனை நோக்கமாகக் கொண்டு சிரமதான சங்கப் பிரிவு இயங்கிவருகின்றது.

இதிலே செயலிழந்துள்ள சங்கங்களை செயற்படுத்துவதற்கும் நடைமுறையிலுள்ள சங்கங்களை மிகவும் சிறப்பாக பேணிச் செல்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை சர்வோதய சிரமதான சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் 123 ஆம் அதிகாரத்தின் கீழ் சுயாதீனமானதும் சட்டரீதியானதுமான ஒரு அலகாக பதிவு செய்யப்படுதல் ஆரம்பிக்கப்பட்டதோடு தற்போது ஒட்டுமொத்த நாடும் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்ற வகையில் 5,446 சர்வோதய சிரமதான சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சர்வோதய சிரமதான சங்கங்களுக்கான யாப்பின் கீழ் கிராமிய மட்டத்தில் இயங்கி வருகின்ற இச்சங்கங்களின் அடிப்படைத் தகவல்கள் உள்ளடங்கிய தகவல் முறைமையொன்றை கணினிமயப்படுத்துவதற்கான பணி தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

### சம்பந்தப்பட்ட வருடத்தில் எமது மத்தியப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சேவைகள்

2018/19 ஆம் ஆண்டுக்கான சர்வோதய சிரமதான சங்கங்களை செயற்படுத்துவதற்கான திட்டம் மற்றும் முன்னேற்றம்

260 சங்கங்களை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டதோடு தற்போது அனைத்து அளவுகோல்களையும் பூர்த்திசெய்துள்ள 75 சங்கங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக 176 அடிப்படை சுற்றுக் கலந்துரையாடல்கள்/76 பொதுச்சபை கூட்டங்கள்/74 நிறைவேற்றுச் சபைக் கூட்டங்கள் மற்றும் 76 புதிய உறுப்பினர்கள் நியமித்துக்கொள்ளப்படுதல் மேற்கொள்ளப்பட்டன.

### சர்வோதய சிரமதான சங்கங்களைப் பேணிச் செல்வதற்காக சங்கத்தின் மத்திய பிரிவு ஆரம்பித்த நிதியத்திலிருந்து கடன் வழங்குவதன் முன்னேற்றம்.

சர்வோதய சிரமதான சங்கங்களை செயலூக்கத்துடனும் பலமிக்கதாகவும் பேணிச் செல்வதற்காக சர்வோதய சிரமதான சங்கத்தின் பணத்தை ஈடுபடுத்தி "சர்வோதய சிரமதான சங்கங்களை வலுவூட்டுதல்" ஊக்குவிப்புக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு அந்த நோக்கத்தினை முதலாகக் கொண்டு உருவாக்கப்பட்ட சர்வோதய சிரமதான சங்கங்களை வலுவூட்டுவதற்கான நிதியத்தின் மூலம் கடன் வழங்கும் முன்னோடிக் கருத்திட்டத்தின்கீழ் கடன் வழங்குவதன் முன்னேற்றம்.இதற்காக ஒருவருட சலுகைக் காலம் வழங்கப்படுகின்றது. முதலாம் மாதத்தில் வட்டி அறவிடப்படமாட்டாது. அதன் பின்னர் அறவிடப்படுதல் மாவட்ட நிலையத்துடன் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

### சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன் கிடைக்கப்படுதல் பற்றிய விபரங்கள் 2019/03/31 ஆம் திகதியில்

| தொடர் இலக்கம் | மாவட்டம் | சங்கத்தின் பெயர் | வழங்கப்பட்ட திகதி | வழங்கப்பட்ட தொகை ரூபா | கிடைக்கப்பட்ட தொகை ரூபா | கிடைககப்பட்ட வட்டி ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 01 | காலி | வ.கூ.ப கட்டுகொலிக சர்வோதய சி.சங்கம் | 2018/06/29 | 100000 | 50004 | 6000 |
| 02 | அம்பாந்தோட்டை | வ.கூ.ப கிவுல வோதய சி.சங்கம் | 2017/09/22 | 100000 | 55000 | 16000 |
| 03 | அம்பாந்தோட்டை | வ.கூ.ப பல்லன்தர சர்வோதய சி.சங்கம் | 2018/06/29 | 100000 | 5000 | 7000 |
| 04 | களுத்துறை | வ.கூ.ப கெக்குலாதொல சர்வோதய சி.சங்கம | 2017/04/04 | 100000 | 45000 | 20000 |
| 05 | களுத்துறை | வ.கூ.ப பொக்கேகம சர்வோதய சி.சங்கம் | 2017/04/04 | 100000 | 25000 | 16000 |

### சர்வோதய சிரமதான சங்கங்களின் உத்தியோகத்தர்களின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

2018/04/01 தொடக்கம் 2019/03/31 ஆம் திகதிவரை சர்வோதய சிரமதான சங்கங்களின் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 15 நடத்தப்பட்டுள்ளதோடு அவற்றில் பங்கேற்றுள்ள சிரமதான சங்கங்களின் எண்ணிக்கை 286 ஆகும்.

சர்வோதய இயக்கத்தின் தேசிய நோக்கத்தினை நிறைவேற்றிக்கொள்ளுதல்

60 வருடத்திற்கு அப்பால் இலக்காகக் கொள்ளப்பட்டுள்ள சர்வோதய அபிவிருத்தி வேலைத்திட்டம் நாட்டில் முன்னெடுக்கப்படும்போது சர்வோதய சிரமதான சங்கம் மிகவும் முக்கியமான பணியினை நிறைவேற்றும். நாட்டில் காணப்படுகின்ற அரசியல் உறுதிப்பாடின்மையை ஸ்திரத்தன்மைக்குக் கொண்டுவர வேண்டுமானால் கிராமிய மட்ட சமுதாயத்தை புரிதல், தலைமைத்துவம் மற்றும் பொதுவாக திட்டமிடப்பட்டதொரு வேலைத்திட்டத்தை நோக்கி வழிநடத்த வேண்டியது அவசியமென சர்வோதயம் நம்புகின்றது. அதற்காக சர்வோதய சிரமதான சங்கப் பிரிவானது கடந்த வருடத்தில் பணியாற்றியுள்ளது.

அதன்கீழ், அடிப்படையில் கிராம மக்களை செயல்முனைப்புடன் சர்வோதய நோக்கங்களின்பால் அணிதிரளச்செய்வதன் பொருட்டு சங்கங்களின் அளவுகோல்களைப் பூர்த்தி செய்வதற்கும் செயல்முனைப்புடன் பணியாற்றுவதற்கும் தேவையான பயிற்சியைப் பெற்றுக்கொடுப்பதற்கு முடிந்துள்ளது. நிதமும் கலந்துரையாடுதல் மற்றும் நிறைவேற்றுச் சபை உள்ளடங்கிய முகாமைத்துவ முறைமை பலமடைந்திருத்தல் என்பவற்றின் காரணமாக செயல்முனைப்பான சங்கங்களில் அளவுசார் பெறுமதியைப் பார்க்கிலும் தரம்சார் பெறுமதியைக் காண முடிகின்றது. சங்க உத்தியோகத்தர்களின் நிதி முகாமைத்துவ புரிதல், திட்டமிடல் ஆற்றல், நேர்மை, வெளிப்படைத் தன்மையுடன் பணியாற்றுதல் ஆகிய காரணிகளினால் சர்வோதய இயக்கம் தொடர்பாக காணப்படுகின்ற நம்பிக்கையானது மென்மேலும் உறுதியாகி வருகின்றது.

எனவே, ஊழல் மற்றும் விரயம் நிறைந்து காணப்படுகின்ற சமூகக் கட்டமைப்பில் சர்வோதயத்தின் நிலைபேறான அபிவிருத்தி வேலைத்திட்டத்தைப் போலவே சமூக சனநாயகம் உறுதிப்படுத்தப்படுகின்ற வேலைத்திட்டமாக பொதுமக்களின் வரவேற்பு அதிகரித்துள்ளது. அது சர்வோதயத்தின் எதிர்கால அரசியல் அபிவிருத்தி நோக்கத்தினை நாட்டில் ஸ்தாபிப்பதற்கு பெரும் உந்துசக்தியாக அமையும்.













கருத்திட்ட முகாமைத்துவப் பிரிவு

## கருத்திட்ட முகாமைத்துவ பிரிவின் நிறைவேற்றுக் குழுவின் சுருக்கம்(PMU)

சர்வோதய இயக்கத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்களைத் திட்டமிடுதல்,பயனுள்ள வகையில் கருத்திட்டங்களுக்காக நிதி முதலீடுகளை மேற்கொள்ளுதல், உரியமுறையில் முகாமைத்துவம் செய்தல், மீளாய்வு மற்றும் மதிப்பீடு செய்தல், உதவி வழங்கும் நிறுவனங்களுக்கு வெளிப்படைத் தன்மையுடன் அறிக்கையிடுதல் ஆகிய முக்கியமான செயற்பொறுப்பு கருத்திட்ட முகாமைத்துவ பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மறுபுறத்தில் சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களின் நோக்கங்களை மேற்பார்வை செய்து மக்களின் வாழ்க்கை நிலைமையினைக் கட்டியெழுப்பி அவர்களை வலுவூட்டுவதும் கருத்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. வரலாற்றில் சர்வோதயத்திற்கு பெரும் ஆதரவினைப் பெற்றுத் தந்த சில கொடையாளர்கள் தற்போது நிறுவனத்திற்கு ஆதரவு நல்குவதில்லை. அவர்களுள் பெரும்பான்மையானவர்கள் இலங்கையிலிருந்து நிரந்தரமாக வெளியேறி உள்ளதோடு சிலர் சிறிய அளவிலான நிகழ்ச்சித் திட்டங்கள் வரை அவர்களுடைய வேலைத்திட்டங்களை குறைத்துக் கொண்டுள்ளனர். சர்வோதய கருத்திட்டமுகாமைத்துவமும் கடந்த அறுபது வருடங்கள் பூராக பங்களிப்பாளர் மற்றும் நிலயதார்த்தங்களை பிரதிபலித்து காலத்துடன் பரிணாமம் அடைந்துள்ளது. வலுவான தத்துவ அடிப்படையைக்கொண்ட சர்வோதயமானது கொடையாளர்களுடன் இணைந்து நிலத்தில் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தவதற்காக நிகழ்ச்சித்திட்டங்களைத் தெரிவு செய்து கொண்டுள்ளது. சாதாரணமாக சர்வோதயத்தினால் தமது சேவை பெறுநர்களுக்கு அனுகூலங்களை வழங்கி நிதி வழங்கும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது. இருப்பினும் அது பட்டியலிடப்பட்டுள்ள ஏனைய அனுகூலங்களையும் பெற்றுக்கொள்கின்றது. சர்வோதயத்தினால் 2017 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் உதவி வழங்கிய கருத்திட்டங்கள் 45 க்காக சுமார் 385 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

### நடைமுறைபடுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள்

| | நிகழ்ச்சித் திட்டம் | காலம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | வீட்டிவைப் பேணிச் செல்லுதல் பற்றிய இளைஞர் பயிற்சி (NVQ (04) | 2018.08.13 இலிருந்து 2018.11.13 வரை | அலுவலக உதவியாளர் தொழில் சார் பயிற்சி, தேசிய தொழில்சார் தகைமை மட்டதரம் பற்றிய திறன் தகைமை சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படுதல் |
| 02 | மோட்டார் சைக்கள் இயந்திரப் பயிற்சி | 2018.11.25 இலிருந்து 2019.01.15 வரை | NVQ 3இளைஞர் பயிற்சிதிறன் தகைமை சான்றிதழ் வழங்கப்படுதல். |
| 03 | கிளிநொச்சியில் சமுதாய அபிவிருத்தி நிலையத்தை நிர்மாணித்தல். Mast Care Science | 2018.09.19இலிருந்து 2019.04.19 வரை | சமுதாய அபிவிருத்தி நிலையம் நிர்மாணிக்கப்படுதல் (வானுனை) கிளிநொச்சியின் மக்கள் செயற்பாட்டினைக் கட்டியெழுப்புவதற்காக வாய்ப்பு உருவாகுதல். |
| 04 | சமூக சேவைகள் படையணி கருத்திட்டத்தின் மாதிரியினை வலுவூட்டுதல் (யுனிசெப்) | 2018.04.20 இலிருந்து 2019.04.30 வரை | கொழும்பு,காலி,பதுளை,யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக மக்கள் கவனத்தை ஈர்ப்பதற்கு இயலுமை ஏற்படுதல். |
| 05 | இலங்கையின் திறந்த அரச பங்காண்மை இயக்கத்தின் வழங்கல் மற்றும் கோரிக்கை உருவாக்கம (SL-OGP) | 2018.07.01 இலிருந்து 2019.05.31 வரை | இலங்கையின் திறந்த அரச பங்காண்மை இயக்கத்தின் வழங்கல் மற்றும் கோரிக்கை உருவாக்கம் அர்ப்பணிப்புகள் தொடர்பாக பொது மக்களை விழிப்பூட்டுதல் மற்றும் அரச சேவை வழங்கல்களின் முன்னேற்றம் மற்றும் அரச கணக்கீட்டின் தரத்தினை மேம்படுத்துதல். |
| 06 | இன ரீதியான தொடர்புகளை முன்னேற்றுதல் | 2018.06.01 இலிருந்து 2019.05.31 வரை | P2P செயற்பாடுகள் தொடர்பாக விழிப்பூட்டுதல் மற்றும் மனோபாவங்கள் மற்றும் நடத்தைகளின் வேறுபாடுகளை இனங்காண்பதற்காக கருத்திட்டத்தளங்களில் இனங்களுக்கிடையிலான சமூக மூலதனம் மற்றும் வர்த்தக கற்றாடல் பற்றிய காரணிகள் அடித்தளத்தை உறுதிப்படுத்துதல். |

| | | | |
|---|---|---|---|
| 07 | சந்தையை வரைவிலக்கணம் செய்தல், பால் கருத்திட்டம் (MOD) | 4 வருடம் | யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மில்லவாய், மன்னார், குருநாகல்,அநுராதபுரம்,பொலன்னறுவை,திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை மற்றும் மொனறாகலை ஆகிய மாவட்டங்களில் இக்கருத்திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டது. |
| 08 | வஞ்சக் கடத்தலை மறுதலிப்பதற்கான வலுவூட்டல் கருத்திட்டம் (SCOUT) | 2019.02.01இலிருந்து 2021 வரை | சாதரண மக்கள் பிரிவுகள் மற்றும் இனங்காணப்பட்ட ஆபத்துறு நிலையிலுள்ள நபர்கள் தொடர்பாக கவனம் செலுத்துதல். |
| 09 | வர்த்தகசந்தைப்படுத்தலின் ஊடாக சுய செயற்பாடு,எழுத்தறிவு மற்றும் கவனம் செலுத்தப்படுதல் (PALAMA) | சனவரி 1 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதோடு 2023 செப்டெம்பர் முடிவடைகின்றது. | முல்லைத்தீவு, நுவரெலியா, பதுளை, கிளிநொச்சி, திருகோணமலை, மொனறாகலை மற்றும் இரத்தினபுரி,ஆகிய 7 மாவட்டங்களில் பெற்றோர்கள் மற்றும் பாடசாலைச் சங்கங்கள் உள்ளடங்களாக பாடசாலைப் பிள்ளைகள்,ஆசிரியர்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. |

## ஒட்டுமொத்த நோக்கு மற்றும் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கான பங்களிப்பு

சர்வோதய கருத்திட்ட முகாமைத்துவ அலகின் கீழ் நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்ற கருத்திட்டங்கள் ஒட்டுமொத்த நிறுவனங்களின் நோக்கு மற்றும் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு பங்களிப்பு நல்கின்றது. இலங்கை மக்களைக் கட்டியெழுப்புதல், வலுவூட்டுதல் மற்றும் நல்வாழ்வு மற்றும் சகல மட்டங்களிலும் குடும்பம்,கிராமம்,தேசம் மற்றும் உலகம் மற்றும் ஆன்மீகம்,நல்லொழுக்கம்,கலாசாரம்,சமூக,பொருளாதார மற்றும் அரசியல் ஆகிய புதிய கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக வலுவான தொழில்நுட்ப ஆதரவு வழங்கப்படுதல் ஒட்டுமொத்த நோக்கு மற்றும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு பங்களிப்பு நல்கின்றன. இன்றைய நிலைமையின் காரணமாக முகாமைத்துவ பிரிவினால் சர்வோதயத்தின் நிலைபேறான நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பெருமளவிலான தொழில்நுட்ப முறைமைகள் பயன்படுத்தப்படுவதோடு இலங்கையில் மக்களை கட்டியெழுப்புவதற்காகவும் வலுவூட்டுவதற்காகவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இனங்களுக்கு மத்தியில் இடைத் தொடர்புகளை முன்னேற்றுதல், இலங்கையின் பொருளாதார துறையில் ஈடுபடுதல், வீட்டு நிர்வாகம் பற்றிய பயிற்சி மற்றும் மோட்டார் சைக்கிள் எந்திர கருத்திட்டம், புதிய வாழ்வாதாரங்கள் மற்றும் முழுமையான தொழில் முயற்சி என்பவற்றுக் காக பங்களிப்பு நல்கியது. இலங்கையின் திறந்த அரச பங்காண்மைக்கான கோரிக்கையை உருவாக்குவதற்கான கருத்திட்டத்தின் ஊடாக அது கிராம சுவராஜ்ஜியம் மூலம் புதிய அரசியல் முறை மற்றும் அதன் மூலம் புதிய அரசியல் செயன்முறை ஒன்றின் ஆரம்பமும் சமூகசேவைகள் உழைப்பாளர் படையணி மாதிரி கருத்திட்டத்தினை வலுவூட்டுதல் மற்றும் வஞ்சக் கடத்தல் முயற்சிகளை மறுதலித்தல்(SCOUT) சமூக நலனோம்பல் மற்றும் பாதுகாப்பு ஆகிய துறைகளுக்கு பங்களிப்பு நல்கப்படுகின்றது.













நகரோதயம்

## நகரோதயம்

நகர்புற சமுதாயத்தில் முழுமையான அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கத்தோடு நகரோதயம் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. சர்வோதயத்தின் நகரோதயம் நிலையமானது காலத்திற்குப் பொருத்தமான குறிக்கோள்களை அர்த்தமிக்கதாக்கும் நோக்கத்துடன் நகரோதயத் திட்டத்தைத் தயாரித்து நடைமுறைப்படுத்தியது. உச்ச மட்ட நகர்சார் சமுதாயம், நகர்சார் சமுதாயம், பகுதியளவிலான நகர்சார் சமுதாயம், ஒப்பீட்டு கிராமிய சமுதாயம் ஆகிய 4 சமூக படிநிலைகளைக்கொண்டு கொழும்பு மாவட்டத்தின் கட்டமைப்பு உருவாகியுள்ளது. சர்வோதயத்தின் நகரோதய எண்ணக்கருவின் பிரகாரம் நகரத்தில் சர்வோதய நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்போது பகுதியளவிலான நகர்சார் சமுதாயம் மற்றும் நகர்சார் சமுதாயம், அங்கு காணப்படுகின்ற உப கலாசார குழுவொன்றாகிய தோட்டக் குடியிருப்புகள், தெருக் குடும்பங்கள் ஆகிய சமூக படிநிலைகளும் படிப்படியாக உருவாகி வருகின்றன. மேலும் நச்சுக் கலக்காத உணவு நுகர்வு செய்யப்படாமை, சீரான சுகாதார பழக்க வழக்கங்களிலிருந்து வெளியேறுதல், உயர்கல்வி உரிமை என்பன சில மக்கள் குழுமங்களுக்கு கிடைக்கப்படாததன் காரணமாக பல்வேறுபட்ட சமூக நெருக்கடிகள் நகரத்தில் உருவாகி வருகின்றன. நகரத்தில் உதயத்தினை ஏற்படுத்தும் அடிப்படைக் குறிக்கோளுடன் இயங்கிவருகின்ற நகரோதயம் எண்ணக்கருவின் ஊடாக மேற்படி சமூக நெருக்கடிகளுக்குத் தீர்வுகளை வழங்குவது காலத்தின் தேவையாக உருவாகி வருகின்றது.

மேற்படி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளலானது நகரோதயம் நிலையத்தினை அடிப்படையாகக் கொண்டு 4 முறையியல்களின் ஊடாக இடம்பெற்றன. அவையாவன,

1. சமுதாயக் கல்வி மற்றும் தகவல் நிலையம்
2. உப கலாசாரங்களை அர்த்தமிக்கதாக்குவதற்கான நிலையம்
3. வள அபிவிருத்தியின் ஊடாக சுய நிதியாக்கம்
4. மீனவ சமுதாயத்தில் காணப்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதன் பொருட்டு முறையான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.

### 1. சமுதாயக் கல்வி மற்றும் தகவல் நிலையம்

❖ **நிழல் பிரதேச சபைக் கூட்டங்கள் - ஹோமாகம**

பிரஜைகள் முன்மொழிவுத் திட்டமொன்றைத் தயாரித்து ஹோமாகம பிரதேச சபைக்குக் கையளிப்பதற்காக ஹோமாகம பிரதேசத்தில் நிழல் சபைக் கூட்டங்கள் 16 நடத்தப்பட்டன.

❖ **யுனிசெப் சிறுவர் பாதுகாப்பு கருத்திட்டம்**

சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற துன்புறுத்தல்களை இல்லாது ஒழிப்பதனை முதலாகக் கொண்டு சிறுவர் பாதுகாப்பு செயன்முறைகளுடன் இணைந்திருக்கின்ற அரச மற்றும் அரச சார்பற்ற துறைகளைச் சேர்ந்த அனைத்து உத்தியோகத்தர்களையும் ஊக்குவிப்பதற்காகவும், இணைப்பாக்கம் செய்வதற்காகவும் யுனிசெப் நிறுவனத்தினால் நாட்டில் தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டத்திற்கு அமைவாக கொழும்பு மாவட்டத்தில் ஹோமாகம பிரதேசத்தில் இவை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. முதலாவதாக சர்வோதயமானது ஹோமாகம மாவட்டத்தில் கொழும்பு மாவட்ட அமைப்பிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர்களை இனங்காண்பதற்காக நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பித்ததோடு அதன் போது கருத்திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் செயன் முறைகள் என்பன தெளிவுபடுத்தப்பட்டன. அதன் பின்னர் சர்வோதயமானது திருகோணமலை மாவட்ட நிலையத்தில் இந்த உத்தியோகத்தர்களுக்காக இரண்டு நாள் சாத்திய வள மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டமொன்றை செயற்படுத்தினர் நிகழ்ச்சித்திட்டத்தின் பின்னர் தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்காக தொழில்நுட்ப ஆதரவு வழங்கும் நோக்கத்துடன் 30 டெப் இயந்திரங்கள் வினியோகிக்கப்பட்டதோடு ஹோமாகம பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட பிள்ளைகளுக்காக பாடசாலை உபகரணங்களும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

❖ தகவல் அறிவதற்கான சட்டம் தொடர்பில் 3 சமுதாய விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள் நடத்தப்படுதல்.

**2. உப கலாசாரங்களை அர்த்தமிக்கதாக்குவதற்கான நிலையம்**

- மீதொட்டமுல்ல தற்காலிக கற்றல் நிலையம் திறந்து வைக்கப்படுதல் மற்றும் துணை வகுப்புகள் ஆரம்பிக்கப்படுதல். இந்த நிலையத்தில் கல்வி பயிலும் பிள்ளைகளின் எண்ணிக்கை 121 ஆகும்.

**❖ மீதொட்டமுல்ல சித்திரைப் புத்தாண்டு விழா**

மீதொட்டமுல்ல குப்பை மேட்டிற்கு அருகாமையில் அமைந்துள்ள தோட்டக் குடியிருப்பில் வாழ்கின்ற மீதொட்டமுல்ல 101 ஆம் இலக்க தோட்டத்தில் வாழ்கின்ற மக்களுடைய பங்கேற்பில் சித்திரைப் புத்தாண்டு விழா நடத்தப்பட்டதோடு அதில் பங்குபற்றிய அனைத்து வயதுகளுக்குமான பிரிவுகளைச் சேர்ந்த 212 பிள்ளைகளுக்கு பரிசில்களாக பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

**❖ போதைப்பொருளற்ற ஒரு நகரம்.**

தோட்டக் குடியிருப்பு இளைஞர்களை போதைப் பொருள் பாவனையிலிருந்து விடுவித்துக் கொள்வதற்காக 5 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சித்திட்டத்தினூடாக 15 பேர் பயிற்றுவிக்கப்பட்டனர்.

❖ இனிய நத்தார் பண்டிகை கொண்டாட்டம்.

**3. வள அபிவிருத்தியின் ஊடாக சுய நிதியாக்கம்**

- சேதனப்பசளை பயன்படுத்தப்படும் பயிர்ச்செய்கையை பிரபல்யமடையச் செய்தல்.
- கறவைப்பசுக்கள் பகிர்ந்தளிக்கப்படுதல் மற்றும் பால் விவசாயிகளை கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டம்.
- கொழும்பு மாவட்டத்தில் இருக்கின்ற பால் பண்ணையாளர்களை ஊக்குவிப்பதற்காக தெரிவுசெய்யப்பட்ட 11 பால் பண்ணையாளர்களுக்கு மத்தியில் 14 கறவைப்பசுக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

**4. மீனவர் சமுதாயத்தில் காணப்படுகின்ற பிரச்சினைகளை தீர்ப்பதன் பொருட்டு முறையான வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துதல்.**

**❖ கடற்கரைக்கான சுதந்திரம்**

சர்வோதய கொழும்பு மாவட்டம், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒன்றிணைந்து கல்கிசை கடலோர வலயத்தினை சுத்தம் செய்தல் மற்றும் பவளப்பாறைகள் பாதுகாக்கப்படுதல் பற்றிய விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டமொன்றை மேற்கொண்டன.

**❖ நீரேந்துப் பிரதேசங்களைப் பாதுகாத்தல்**

கொழும்பு மாவட்டத்தில் நீரேந்துப் பிரதேசங்கள் மற்றும் ஈரநில பாதுகாப்புத் தொடர்பாக மீனவர் சமுதாயம் மற்றும் ஹோட்டல் கைத்தொழிலாளர்கள் விழிப்பூட்டப்படுவதற்கான 10 நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

**ஒட்டுமொத்த சர்வோதய தத்துவம் மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பங்களிப்புச் செய்யப்பட்ட விதம்**

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் சர்வோதயத்திற்கான நகரோதய சேவையின் மூலம் சமுதாய கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், உப கலாசாரங்களை அர்த்தமிக்கதாக்குவதற்கான நிலையம், வள அபிவிருத்தியின் மூலம் சுய நிதியாக்கத்திற்கு ஆற்றுப்படுத்துதல், மீனவ சமுதாயத்தில் காணப்படுகின்ற சிக்கல்களை தீர்க்கும் பொருட்டு முறையான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக நல்லொழுக்க விழுமியங்கள் மீது அமைந்து பங்கேற்பு கூட்டு அபிவிருத்தியில் நகர்ப்புற மக்களை ஆற்றுப்படுத்துவதற்கு முடிந்தது.











ප්‍රථම ණය ප්‍රාදේශීය සභා කාර්යාලය මිනුවන්ගොඩදී විවෘත කෙරෙයි



தேசோதயப் பிரிவு

## தேசோதயப் பிரிவு

சர்வோதயத்தினால் வரிசைப்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி நோக்கங்களின் உறுதியானதும் மிக முக்கியமானதுமான பணியாக அமைவது தேசத்தில் உதயத்தினை ஏற்படுத்துவதற்கான அரசியல் நோக்கமாகும். பல்வேறுபட்ட பரிமாணங்களை நோக்கி எமது நாட்டின் அரசியல் கருத்தியல்கள் ஊசலாடுவதுடன் 60 வருடங்களுக்கும் அதிகமான காலப்பகுதி சர்வோதய மக்கள் இயக்கமாக சமூகமயப்படுத்தப்பட்ட கட்சி அரசியல் அல்லாத இணக்கப்பாட்டு அரசியல் எண்ணக்கரு அன்றைய காலகட்டத்தை விட இன்று செல்லுபடியாகி தீவிரமடைந்து வருகின்றது. அதன் காரணமாக சர்வோதய இயக்கத்திற்கு நாட்டில் காணப்படுகின்ற சமூக பொருளாதார அரசியல் நெருக்கடிகளிலிருந்து தப்பிச் செல்ல முடியாது. அனைத்து மக்களுக்கு மத்தியிலும் காணப்படுகின்ற உண்மையான பலத்தினை எழுப்பி ஆட்சியாளர்கள் மக்களுக்கு வகை பொறுப்பு கூறுகின்ற கிராமிய மட்ட சிறிய இராஜ்ஜிய அலகு உருவாக்கப்படுகின்ற புதிய அரசியல் கலாசாரம் ஒன்றை உருவாக்குவதற்கு பங்களிப்பு நல்குதல் சர்வோதய தேசோதயத்தின் நோக்கமாகும். இந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக பிரதேச,மாவட்ட,மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் பல்வேறுபட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேசிய ரீதியில் காணப்படுகின்ற நெருக்கடி அரசியல் சொல்லாடலின் முன்னால் சர்வோதய தேசோதயப் பிரிவு முதன்மை பெற்று சிவில் சமூக அமைப்புகளுக்கான வலையமைப்புடன் இணைந்து உருவாக்கப்பட்ட "தேசியமக்கள் இயக்கம்" 2018 சர்வோதய இயக்கத்தினதும் தேசத்தினதும் திருப்புமுனையாக அமையும் .

### 02. தேசோதய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான கருத்திட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

புதியதோர் அரசியலமைப்பு தயாரிக்கப்படும் போது மக்களுக்கு அரசியலமைப்புப்பற்றிய கல்வியினை வழங்குதல் மற்றும் மக்கள் நேய முன்மொழிவுகளை உள்ளடக்குவதற்காக மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்களை உருவாக்குதல்.

| இலக்கம் | நிகழ்ச்சித்திட்டம் | எண்ணிக்கை | பங்கேற்பு |
|---|---|---|---|
| 01 | அரசியலமைப்புத் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்கள் இடம் பெற்றன. | 10 | 320 |
| 02 | சமுதாய பரிமாற்றம் | 03 | 180 |
| 03 | புதிய அரசியலமைப்பு வகுக்கப்படுதல் தொடர்பாக குறுங் வீடியோநாடாக்களை (சிங்களம்/தமிழ் மொழி மூலம்) தயாரித்து சமூகஊடகங்களில் வெளியிடப்பட்டது. | 10 | |
| 04 | புதிய அரசியலமைப்பு தயாரிப்புத் தொடர்பாக தேசோதய பிரவேசம் என்ற பெயரில் நூலொன்றை தமிழ் மற்றும் சிங்களமொழியில் அச்சிடப்பட்டது. | 3000 | |
| 05 | புதிய அரசியலமைப்பு தயாரிப்புத் தொடர்பாக அரசியல் கட்சித் தலைவர்கள் /பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் போன்றோருடன் தேசியமட்ட கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது. | 01 | 73 |

### நிழல் சபை கருத்திட்டங்கள்

உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலம் உச்சமட்ட சேவையை பிரதேசத்திற்கும் மக்களுக்கும் பெற்றுக்கொடுப்பதற்காக இடையீட்டாளராக இருத்தல். உள்ளூராட்சி செயன்முறையில் நேரடியாக பங்கேற்பதற்கு மக்களுக்கு வாய்ப்பினைப் பெற்றுக்கொடுத்தல்.

| தொடர் இலக்கம் | நிகழ்ச்சித் திட்டம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | நிழல் உறுப்பினர்களை விழிப்பூட்டுதல் | 26 |
| 02 | மக்கள் கருத்துக்களை விசாரிப்பதற்கான சந்திப்புக்களை நடாத்துதல் | 23 |
| 03 | பிரதேச சபைக் கூட்டங்களை அவதானித்தல் | 09 |
| 04 | அபிவிருத்தி முன்னுரிமைகளை இனங்காணுதல் | 08 |
| 05 | பிரஜைகள் சாசனம் தயாரிக்கப்படுதல் - மாவட்ட மட்டத்தில் | 03 |
| 06 | பிரஜைகள் சாசனம் தயாரிக்கப்படுதல் - தேசிய மட்டத்தில் சிக்கல்கள் தொடர்பாக தலையிடுதல். | 22 |
| 07 | தகவல் அறிவதற்கான வேலைத்திட்டங்கள் | 11 |

**கடந்த ஒரு வருடகாலப் பகுதியில் தேசோயத்தின் பயணப்பாதை**

**தேசோதயத்தின் செயற்பாட்டினை மேம்படுத்துதல்**

| இலக்கம் | நிகழ்ச்சித் திட்டம் | எண்ணிக்கை | பங்கேற்பு |
|---|---|---|---|
| 01 | மாவட்ட தேசோதய சபைக் கூட்டங்கள் | 90 | 1824 |
| 02 | பிரதேச தேசோதய சபை தொழிற்பாட்டு குழுக் கூட்டங்கள் | 288 | 4320 |

- தேசோதய தேசிய சபையை மிகவும் பலம் வாய்ந்ததாக கட்சி அரசியல் இன்றி அரசியல் இயக்கமாக மீளமைக்கப்படும் நோக்கத்துடன் தேசோதய தேசிய மாநாடு 1184 பேரின் பங்கேற்புடன் சர்வோதய தலைமையகத்தில் இடம் பெற்றது.
- வருடத்தில் புதிய தேசோதய அங்கத்தவர்கள் 242 பேர் அங்கத்துவம் பெற்றுள்ளதோடு தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள தேசோதய அங்கத்தவர்களின் எண்ணிக்கை 14,480 ஆகும்.
- தேசோதய தொழிற்பாட்டுக் குழு 8 தடவைகள் ஒன்றுகூடி எதிர்கால செயற்பாடு தொடர்பாக தீர்மானங்களை மேற்கொண்டுள்ளது.
- காலி,அம்பாந்தோட்டை,நுவரேலியா,கண்டி,மாத்தளை,களுத்துறை, இரத்தினபுரி மற்றும் கம்பஹா ஆகிய மாவட்ட தேசோதய சபைகள் மூலம் சமுதாய புரிந்துணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் 19 நடத்தப்பட்டுள்ளன.
- இரத்தினபுரி,களுத்துறை மற்றும் காலி ஆகிய 3 மாவட்டங்களில் 4 புதிய நிழல் சபைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- திறந்த அரச பங்காண்மையின் கீழ் சிறுநீரக நோய் தடுப்புத்தொடர்பாக கலந்துரையாடல் நடத்தப்பட்டதோடு 72 பேர் அதில் பங்கேற்றனர்.
- தேசோதய மாவட்ட இணைப்பாளர்கள் 52பேரை இனங்காணுதல் மற்றும் அவர்களை விழிப்பூட்டுதல்.
- தேசோதய இளம் தலைவர்களை பயிற்றுவிப்பதற்கான 2 செயலமர்வுகள் வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இடம்பெற்றது.

**தேசோதயத்தின் மூலம் புதிய அரசியல் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படுதல்**

தேசோதயம் மற்றும் தொழில்வாண்மையாளர்களின் சங்கம் உட்பட18 சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து கட்சி அல்லாத தேசிய மக்கள் இயக்கம் என்ற பெயரில் புதிய அரசியல் இயக்கம் ஒன்று உருவாக்கப்படுதல்.

**சர்வோதயத்தின் ஒட்டுமொத்த நோக்கத்திற்கான பங்களிப்பு**

சர்வோதய இயக்கத்தில் பல்வேறுபட்ட அபிவிருத்தித் துறைகள் இயங்கி வருகின்றன. அவற்றுக்கு மத்தியில் தேசோதயப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அரசியல் எண்ணக்கருவானது காலத்திற்குப் பொருத்தமான சமூக தேவையாக மாறியுள்ளது. குறிப்பாக பிரதேச சபை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிழல் பிரதேச சபை நிகழ்ச்சித்திட்டமும் தேசியமட்டத்தில் முறையிலுள்ள தேசியமக்கள் இயக்கமும் நாட்டில் காணப்படுகின்ற அரசியல் நெருக்கடிகளின் முன்னால் பரந்த கலந்துரையாடலுக்கு உள்ளாகி வருதல் சர்வோதய இயக்கத்திற்கு நன்மைமிகு சுற்றுச் சூழலை உருவாக்கியுள்ளது. அது காரணியாக அமைந்து ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்புவதற்கான சமூக சக்தியின் முன்னோடிப்பணியினை நிறைவேற்றுவதற்கு தற்போது காணப்படுகின்ற நிலைமையானது சர்வோதயத்தை கட்டாயப்படுத்துகின்றது.













சர்வோதய உயர்கல்வி நிறுவகம்

# சர்வோதய உயர் கல்வி நிறுவகம்

## 01. அறிமுகம்

சர்வோதயத்திற்கான பரிணாமத்தின் புதிய அடியெடுப்பாகவும், சர்வோதய பல்கலைக்கழகத்தைத் தாபிப்பதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கையாகவும் சர்வோதய உயர் கல்வி நிறுவகம் 2008 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக இலங்கை சமூகத்தை நவீனமயப்படுத்துவதற்கான ஒரு நிலையமாக சமூக, பொருளாதார மற்றும் ஆன்மீக ரீதியான மாற்றங்களின் ஊடாக அனைத்துச் சமுதாயங்களையும் விழிப்பூட்டுவது இதன் அபிலாஷையாக அமைகின்றது. சர்வோதய உயர்கல்வி நிறுவகத்தை பொருத்தமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தரப்புகளுடன் இணைந்து செயற்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் சர்வோதயம் ஊக்கம் காட்டுகின்றது. தமது சமூகங்களை நவீனமயப்படுத்துவதில் ஈடுபடுவதற்கும் உயர் கல்வி நிறுவனங்களுடனும் பல்கலைக்கழகங்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் அது எதிர்பார்க்கின்றது. கிராமங்களிலும் நகர்ப்புற பிரதேசங்களிலும் குறிப்பாக, ஏழை மக்களுக்கும் அதற்கு மேலதிகமாக பொது மக்களுக்கும் கல்வியினை பெற்றுக்கொடுப்பதற்கு சர்வோதய உயர்கல்வி நிறுவகம் எதிர்பார்க்கின்றது.

## 02. 2018/2019 ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள்

### கல்விசார் சுற்றுலாக்கள்

சர்வோதய உயர்கல்வி நிறுவகமானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவ மாணவிகளின் கல்வி நடவடிக்கைகளுக்காக வசதிகளை வழங்குகின்றது. சர்வோதய சமுதாய அபிவிருத்தி மாதிரியானது மேற்படி மாணவர்களுக்கு மத்தியில் விநியோகிக்கப்படுவதோடு தேவையான மாணவர்களுக்கு பயிற்சிக்கான வாய்ப்புகளும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

### உள்நாட்டு மாணவர்களுக்கான பயிற்சி

| காலப்பகுதி | பல்கலைக்கழகம்/ நிறுவனம் | பங்கேற்ற மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2018 ஜூலை தொடக்கம் 2019 மார்ச் வரை | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் தாதியர் பீடம்/ இணை சுகாதார கற்கை பீடம்/ தாதியர் பயிற்சிக் கல்லூரி - அனுராதபுரம்/தேசிய சுகாதார நிறுவகம் - களுத்துறை மருத்துவவியல் பட்டப்படிப்பின் பின் படிப்பு நிறுவகம் (Post Graduate Institute of Medicine), KDU மருத்துவ பீடம், சர்வோதய மகளிர் இயக்கம் | 361 |

### வெளிநாட்டு மாணவர்களுக்கான பயிற்சி

| | | |
|---|---|---|
| 2018 மே மாதம் தொடக்கம் 2019 மார்ச் மாதம் வரை | அபி வியக்தி (Abhi Vyakthi) அமைப்பு, ஜெனிவா பல்கலைக்கழகம், அமெரிக்க வட ஜோர்ஜியா பல்கலைக்கழகம், சொஜெக் அமைப்பு (SOJAG) வர்மவுண்ட் பல்கலைக்கழகம்;, அஜர் பல்கலைக்கழகம், ஹொசெய் பல்கலைக்கழகம், டோக்கியோ JAICA | 107 |

## 03. ஏனைய விசேட கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் 2018 ஏப்ரல் தொடக்கம் 2019 மே மாதம் வரை

- SIHL மற்றும் ECO நிறுவனங்களுடன் இணைந்து வீட்டுத் தோட்டம் தொடர்பான ஒரு செயலமர்வு நடத்தப்படுதல்.
- பிரித்தானியா இம்பீரியல் காலேஜின் கலாநிதி த்ரீசாந்த நாணயக்கார அவர்களுடன் நடத்தப்பட்ட கற்றாடல் கருத்திட்டம் தொடர்பாக ஒரு கூட்டத் தொடர் மற்றும் சிங்கராஜ வனாந்தரத்தில் கள விஜயம், யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் இளைஞர் யுவதிகளின் மனோபாவங்கள் மற்றும் நோக்குப் பற்றிய தேசிய மட்ட ஆய்வு: (Next Generation) ஆரம்பிக்கப்படுதல்.

- SIHL மற்றும் CEPA நிறுவனங்களுடன் நிறுவனம்சார் அறிவுப் பரிமாற்றம் தொடர்பாக நடத்தப்பட்ட கூட்டம்.
- இஸ்ரேல் CIMI நிறுவனத்துடன் செயலமர்வின் இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்படுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கூட்டம்.
- LFLW கருத்திட்டம் ஆரம்பிக்கப்படுதல் மற்றும் உபாயமார்க்க மூலோபாயத் திட்டம் வகுக்கப்படுதல், (Teach for Nepal, SOJAG, University of Agha Khan உடன்)
- தொண்டு சேவை தொடர்பாக ஐக்கிய நாடுகளின் பங்காளர்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்.
- Next Generation ஆய்வுகள் தொடர்பாக மாகாண மட்டத்தில் இலக்குக் குழுக்களுக்கு ஆய்வுக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.
- Next Generation அறிக்கையைத் திட்டமிடுவதற்கான அமர்வு.
- ஸ்ரீ-புநெஎய உடன் சமுதாயச் சுகாதாரம் பற்றிய செயலமர்வு நடத்தப்படுதல் பற்றிய கலந்துரையாடல்.
- கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் சர்வோதயத்துடனான தொடர்புகளை மீள் உருவாக்குவதற்காக Global Eco Village Network எனும் நிறுவனத்தின் அங்கத்தவர்களின் மீள் வருகை.
- பாங்கொக்கில் நடத்தப்பட்ட Global Eco Village Network இன் வலய ரீதியான உபாயமார்க்கத் திட்டமிடல் கூட்டத்தில் உதேஷ் பர்னாந்து பங்கேற்றதோடு அதன் உபாய மார்க்கக் கவுன்சிலுக்குத் தெரிவு செய்யப்பட்டார்.
- Next Generation ஆராய்ச்சிக் கருத்திட்டத்தை வெளியிடுதல். Next Generation இன் முதலாவது ஆலோசனைக் கூட்டம் கண்டியில் நடத்தப்பட்டது.

## 04. SIHL- GNRC நிகழ்ச்சித்திட்டங்கள்- GNRC குழுக்கூட்டம்: 3 மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும்)

- சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான இளைஞர் முகாம்கள் சாந்திசேனா இயக்கம் மற்றும் அரிகதோ இன்டர்நேஷனல் நிறுவனம் இணைந்து மொனராகலை, களுத்துறை, திருகோணமலை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்டன.
- வறுமையை ஒழிப்பதற்கான சர்வதேச தின கொண்டாட்ட நிகழ்ச்சி
- சைபர் பாதுகாப்பு செயலமர்வு (கம்பஹா, நீர்கொழும்பு, வத்தளை)
- சிறுவர் தண்டனை வழங்கப்படுதல் மற்றும் சிறுவர் துன்புறுத்தல்களை ஒழிப்பதற்கான செயலமர்வு
- ஆசிரியர் தின கொண்டாட்டம்
- மீதொட்டமுல்ல பிரதேசத்தில் சிறுவர்களுக்காக கல்வி நிலையமொன்று தாபிக்கப்பட்டது.
- வன்முறையினைத் தடுப்பதற்காக முன் பிள்ளைப் பருவத்தின் பெறுமதி மற்றும் ஆன்மீகம் என்பவற்றை மேம்படுத்துவதற்கான வட்டமேசைக் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

### 05. உயர் கல்வி நிறுவகத்தின் ஊடாக அடையப்பட்ட இலக்குகள்

SIHL இனால் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் இலங்கை சமுதாயத்தினை சமூக மற்றும் கல்விசார் ரீதியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக கல்வித்துறை மட்டுமன்றி சர்வதேசத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதற்கும் முன்னேற்றுவதற்கும் முடிந்தது. சிறுவர் நலனோம்பல் போன்ற செயலமர்வுகள் மற்றும் கருத்திட்டங்களின் மூலம் முதியோர் மற்றும் சிறுவர் சமுதாயத்தின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்த முடிந்தது.

### 06. சமுதாயத்தின் ஒட்டு மொத்த நோக்கத்தினை நிறைவேற்றிக்கொள்வதற்கான பங்களிப்பு

இலங்கையைச் சேர்ந்த இளம் சமுதாயத்தினரின் மனோபாவம், நோக்கங்கள் மற்றும் சிக்கல்கள் விவரிக்கப்பட்டதோடு அதனூடாக குறைபாடுகளைத் தவிர்த்துக்கொண்டு அதற்கான தீர்வுகளை எதிர்கால சர்வோதய கருத்திட்டங்களின் மூலம் பெற்றுக்கொடுப்பதற்கும் அதன் மூலம் ஆரோக்கியமான இலங்கையை கட்டியெழுப்புவதற்காக பங்களிப்பு நல்குவதற்குமான இயலுமை உள்ளது. சர்வோதய சிரமதான சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக இவ்வாறு உயர்கல்வி நிறுவகம் அதன் கருத்திட்டங்களின் மூலம் பங்களிப்பினை வழங்கியுள்ளது.











சர்வோதயப் பண்ணைகள்

## சர்வோதயப் பண்ணைகள்

சர்வோதயப் பண்ணை அபிவிருத்தியின் கீழ் பிரதானமாக அநுராதபுர மாவட்டத்தின் பதவி ஸ்ரீ திஸ்ஸபுர பண்ணை, சாலியபுர பண்ணை மற்றும் மொனறாகலை மாவட்டத்தின் தனமல்வில பண்ணை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் பதவி ஸ்ரீ திஸ்ஸபுர பண்ணை மற்றும் சாலியபுர பண்ணை என்பன வெளிக்கள தொழிற்பாட்டுப் பிரிவின் நேரடி மேற்பார்வையின் கீழ் உள்ளன.

### தனமல்வில பண்ணை

1975 ஆம் ஆண்டு தொடக்கம் இளைஞர்களுக்கு முன்னுரிமையளித்தும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இளைஞர்களின் பலத்தினை இணைத்துக்கொண்டும் உள்நாட்டு விவசாயத் துறைக்கு உயிரளித்தும் பலமான வாழ்க்கை முறையினைக் கட்டியெழுப்புவதற்கு முதலிடமளித்தும் நிலைபேறான முறைகளைப் பின்பற்றியும் பண்ணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சர்வோதய சர்வதேசப் பிரிவுடன் இணைந்து வெளிநாட்டுக் குழுக்களை இணைத்துக்கொண்டு ஒத்துழைப்பு வேலைத்திட்டங்கள் நடத்தப்பட்டதோடு அதனூடாக உள்ளூர் உணவு வகைகளைத் தயாரித்தல், உள்ளூர் சுற்றாடல் தொகுதியை ஆய்வு செய்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. உள்ளூர் நிலைமைகளுக்கு முதலிடமளித்து விவசாய இரசாயனங்கள் இன்றி விவசாய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்குடன் பாபேரியன் ரீப் (Barberyn Reef) நிறுவனத்துடன் இணைந்து சுமார் இருபது ஏக்கர்களில் மூலிகை பயிர்ச்செய்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் இன்று நாடு முகங்கொடுத்துள்ள நீர் பற்றாக்குறைக்குத் தீர்வாக சொட்டு நீர் பாசன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒனேர் அக்ரி நிறுவனத்துடன் இணைந்து விவசாயத்தை கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டமும் விதை உற்பத்தி செயற்பாடும் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

### ஸ்ரீ திஸ்ஸபுர சேதன பண்ணை

வடமத்திய மாகாணத்தில் மக்கள் முகங்கொடுக்கின்ற பிரதான பிரச்சினையாகிய சிறுநீரக நோய்க்குத் தீர்வாகவும் நச்சுக் கலக்காத பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்குத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டு பதவிய ஸ்ரீ திஸ்ஸபுர பண்ணையானது 2016 மே மாதம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது அது 4 ஏக்கர்களைக்கொண்ட சேதன மரக்கறி மற்றும் பழ வகை உற்பத்தி செய்யப்படுகின்ற விவசாயப் பண்ணையாகவும் சமுதாயக் கல்வி நிலையமாகவும் அபிவிருத்தியடைந்து உள்ளது. இதன் உற்பத்திகள் கிராமிய மற்றும் நகர்ப்புற சமுதாயங்கள் இலக்காக கொள்ளப்பட்டு சந்தைக்கு விநியோகிக்கப்படுவதுடன் எமது உற்பத்திகளுக்கு இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஸ்ரீ சர்ட் அண்ட் குட் மார்கெட் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

### சாலியபுர பண்ணை

இது 15 ஏக்கர்களைக்கொண்டமைந்த ஒரு பண்ணையாக காணப்படுவதோடு 4 ஏக்கர்களில் தெங்குச் செய்கையும், 4 ஏக்கர்களில் நெற்செய்கையும் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக 4 ஏக்கர்களில் தெங்குச் செய்கை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. துணைப் பயிர்ச்செய்கையாக கொடித்தோடை செய்கையும், எலுமிச்சை புல் மற்றும் வாழைச் செய்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.













சர்வோதய அபிவிருத்தி நிதி நிறுவனம்

## சர்வோதய அபிவிருத்தி நிதி நிறுவனம்

**அறிமுகம்**

இலங்கையில் நுண்நிதி சேவைத் துறையில் முன்னோடியாகிய சர்வோதய டெவலப்மெண்ட் பைனான்ஸ் 2018/19 ஆம் நிதியாண்டில் அளவுசார் மற்றும் தரம்சார் ரீதியில் தனித்துவமான வளர்ச்சியைக் கைப்பற்றிக்கொண்டுள்ளது. பல உபாய மார்க்கங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதன் மூலம் அதன் உள்ளக ஆபத்துறுநிலை மாதிரியின் பிரகாரம் வருமானம், முற்பணம் மற்றும் வைப்பீடுகள் ஆகிய அனைத்துத் துறைகளிலும் தெளிவான வளர்ச்சி காணப்படுகின்றது.

நாட்டின் கீழ்மட்ட மக்களுக்கு சேவைகளை வழங்குவது எமது நிறுவனத்தின் அடிப்படை நோக்கமாக அமைந்துள்ளதோடு நாம் பெறுகின்ற இலாபம் சர்வோதய இயக்கத்தின் ஊடாக மீண்டும் சமுதாய அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் சமூக சேவைகளிலும் புழங்கவிடுவது நிதித்துறையில் எமது நிறுவனத்தில் காணப்படுகின்ற தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு பண்பாகும். அதேவேளை தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டி அவர்களின் நிதி நிலைமை, வாழ்க்கை நிலைமை மற்றும் அறிவு என்பவற்றை மேம்படுத்தி அதிகளவிலான தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதன் பொருட்டு அவர்களை ஆற்றுப்படுத்துவதற்குத் தேவையான ஆதரவினை வழங்கி நிதித்துறையில் நியாயமான நிதிசார் சேவையொன்றுக்கான தேவையை சுட்டிக்காட்டியுள்ளது.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சந்தையில் தொழிற்பாட்டு வினைத்திறனை போட்டிகரமான மட்டத்தில் பேணிச்செல்வதற்கு சர்வோதய டெவலப்மெண்ட் பைனான்ஸ் நிதமும் பணியாற்றுவதோடு சாதாரண சேமிப்புக் கணக்குகள், சிறுவர் சேமிப்புக் கணக்குகள், நிலையான வைப்புக் கணக்குகள், தனிப்பட்ட கடன், வியாபாரக் கடன், நுண்நிதிக் கடன், தங்கக் கடன், குத்தகை (லீசிங்) போன்ற தனித்துவமான நிதிச் சேவைகள் பலவற்றினை பரந்த வகையிலும் வலுவான முறையிலும் வழங்கி வருகின்றது.

சர்வோதய டெவலப்மெண்ட் பைனான்ஸ் கம்பெனியுடன் இணைந்த வியாபாரங்களாகிய சர்வோதய சிரமதான சங்கங்கள் போன்ற சங்கங்களுடன் இணைந்து அந்த வியாபாரங்களில் நாடு தழுவிய ரீதியில் பரந்து காணப்படுகின்ற பெருமளவிலான அங்கத்தவர் வலையமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுவதோடு புதிய சந்தைகள் மற்றும் கொடுக்கல் வாங்கல் சந்தர்ப்பங்களை கவர்ந்துகொள்வதற்கு முடிகின்ற வகையில் வைப்புப் பெயர்ச்சி மற்றும் வர்த்தகச் சின்ன தெரிவுநிலை என்பவற்றை மேம்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதற்காக கிராமங்களையும் நகரங்களையும் இணைத்து நாட்டின் அனைத்து மாவட்டங்களும் உள்வாங்கப்படும் வகையில் சேவை விஸ்தரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. சர்வோதய அபிவிருத்திக் கம்பெனியின்

- ❖ கிளைகளின் எண்ணிக்கை 30 ஆகும்.
- ❖ வாடிக்கையாளர் சேவை நிலையங்கள் 21 ஆகும்.

2. நிறுவனத்திற்கான வைப்புப் பிரிவின் வளர்ச்சி

- ❖ 2018/19 ஆம் நிதியாண்டில் கைப்பற்றிக்கொள்ளப்பட்டதோடு வைப்புகள் 4.6 பில்லியன் ரூபா தொடக்கம் 5.4 பில்லியன் ரூபாவரை.
- ❖ 19 ஆம் நிதியாண்டில் கைப்பற்றிக்கொள்ளப்பட்டதோடு வைப்புகள் 4.6 பில்லியன் ரூபா தொடக்கம் 5.4 பில்லியன் ரூபாவரை.
- ❖ கடன் தொகுப்பு 4.7 பில்லியன் ரூபா தொடக்கம் 5.1 பில்லியன் ரூபா வரை அதிகரித்துக்கொள்ள முடிந்துள்ளது.
- ❖ லீசிங் பிரிவு நிதி ஆண்டின் இறுதியில் 611 மில்லியன் ரூபா தொடக்கம் 1.1 பில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது.

எமது பாவனையாளர்களுக்கு மிகவும் பரந்த கடன் சேவை வழங்கப்படுவதை நோக்கமாகக் கொண்டு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கடன் மற்றும் தனிப்பட்ட கடன் சேவை வழங்கப்படுவதோடு எமது வாடிக்கையாளர்களுக்கு ஏற்படுகின்ற அவசர நிதித் தேவைகளை மிகவும் வினைத்திறனுடன் சலுகை வட்டிக்கு வழங்குவதற்காக தங்கக் கடன் சேவை புதுப்பொலிவுடன் பேணிச்செல்லப்பட்டு நிதியாண்டின் இறுதியில் 27.2 மில்லியன் ரூபா வரை தங்கக் கடன் தொகுப்பினை வலுவூட்டிக்கொள்ள முடிந்துள்ளது.

சர்வோதய டெவலப்மெண்ட் பைனான்ஸ் இன் தாய் சங்கமாகிய சர்வோதய இயக்கத்தின் 60 ஆம் ஆண்டுப் பூர்த்திக்கு ஒருங்கமைவாக "60-60" எனும் சிரேஷ்ட பிரஜைகளுக்கான புதிய கணக்கொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. விசேட அனுகூலங்கள் மற்றும் வசதிகள் பலவற்றினைப் பெற்றுத்தருகின்ற இந்த கணக்கின் ஊடாக கணக்கு உரிமையாளர்களுக்கு இந்தியாவில் பௌத்த வழிபாட்டுத் தலங்களை அல்லது இந்தியாவில் உள்ள ஏனைய மத வழிபாட்டுத் தலங்களை வழிபடுவதற்கான பாக்கியம் வழங்கப்படுவது சிறப்பாகும்.

**எமது புதிய சேவைகள்**

- 1319 துரித அழைப்புச் சேவையின் மூலம் தமது வாடிக்கையாளர்களுக்கு எந்தவொரு நிதித் தேவை தொடர்பாகவும் கேட்டறிவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதோடு அதற்கு மேலதிகமாக வலைதளங்கள் மற்றும் சமூக வலைதளங்களின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற ஊக்குவிப்பு நடவடிக்கைகளின் மூலம் வாடிக்கையாளர்களுடன் கிட்டிய நெருக்கம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. ருநளவநசெ ருவெழைெ மூலம் வெளிநாடுகளில் பணியாற்றுகின்ற இலங்கையர்களுக்கு எமது நிறுவனத்தின் ஊடாக நிதி பரிமாற்றம் செய்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

**எமது சேவை திருப்தி**

சர்வோதய டெவலப்மெண்ட் பைனான்ஸ் இன் தாய் சங்கமாகிய சர்வோதய இயக்கத்தின் பொருளாதார வலுவூட்டல் செயற்பாட்டுக்கு பலமான பங்களிப்பினை வழங்கி அபிவிருத்தியடைந்த சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதன் பொருட்டு பங்களிப்பு நல்குவதற்கு எமக்கு இயலுமை கிடைத்துள்ளது.

நிதி கொடுக்கல் வாங்கல்களை கடந்துசென்ற நட்புறவுடன்கூடிய மானுட இடைத் தொடர்புகளை பேணிச் செல்வதற்காக சர்வோதய டெவலப்மெண்ட் பைனான்ஸ் சிங்களம், தமிழ், முஸ்லிம் மற்றும் பறங்கியர் ஆகிய அனைத்து இணங்களுக்கும் பௌத்தம், இந்து, கிறிஸ்தவம், கத்தோலிக்கம் மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களுக்குமான பிரதிநித்துவத்துடன் கூடிய மக்களின் அனைத்து நிதித் தேவைகள் சார்பாகவும் நியாயத்தை முதலாகக் கொண்டு மனிதநேய நிதிச் சேவைகளை வழங்குவதற்கு அர்ப்பணிப்பு பூண்டுள்ளது.

## சீட்ஸ் (கெரண்டி) கம்பனி SEEDS

2013 ஆம் ஆண்டு சீட்ஸ் (கெரண்டி) கம்பெனியினால் மேற்கொள்ளப்பட்ட அடிப்படை வியாபாரச் செயன்முறையானது சர்வோதய டெவலப்மெண்ட் பைனான்ஸ் கம்பெனிக்கு ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் சீட்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிறுவனத்திற்கு பயனுள்ள வகையிலும் சர்வோதய இயக்கத்தின் நோக்குக்கு அமைவாகவும் முகாமை செய்வதனை சீட்ஸ் நிறுவனத்தின் நோக்கமாகக் கொண்டு நிறுவனத்தின் நடவடிக்கைகள் நெறிப்படுத்தப்படுகின்றன. சீட்ஸ்(கெரண்டி) கம்பெனியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட தொழில்முயற்சி மேம்பாட்டுப் பிரிவின் நடவடிக்கைகள் மற்றும் முகாமைத்துவ பயிற்சிப் பிரிவின் நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்படுவதன் மூலம் வெளி நிறுவனங்களுக்கு நிகழ்ச்சித் திட்டங்களை வியாபார மட்டத்தில் நடத்துவதும் சீட்ஸ் (கெரண்டி) கம்பெனியினால் மேற்கொள்ளப்பட்டு வந்த விசேட வியாபார நடவடிக்கைகள் முடிவடையும் வரை தொடர்ச்சியாக பேணிச் செல்வதும் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. இந்த வியாபார நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பூர்த்தி செய்யப்பட்டன.

சர்வோதய டெவலப்மெண்ட் பைனான்ஸ் கம்பெனி ஆரம்பிக்கப்படுவதற்காக சீட்ஸ்(கெரண்டி) கம்பெனியினால் 540 மில்லியன் ரூபா பங்கு மூலதனமாக முதலீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நிதிக் கம்பெனியில் முதலீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான உரிமையை சீட்ஸ்(கெரண்டி) கம்பெனி கொண்டுள்ளது. இந்த பங்கு உரிமைக்காக நிறைவேற்று அல்லாத சீட்ஸ் பணிப்பாளர் சபையைச் சேர்ந்த சுமார் 3பேர் நிதிக் கம்பெனியின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிக் கம்பெனியின் நடவடிக்கைகளை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக சட்ட ரீதியான தேவைகளை சீட்ஸ்(கெரண்டி) கம்பெனி மேற்கொண்டு வருகின்றது. அதேவேளை, சட்டரீதியான தேவைகளுக்காக தெரிவுசெய்த நிறுவனத்தை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான சட்ட நிலைமையை பாதுகாத்துக்கொண்டு சர்வோதய சங்கத்தின் ஒரு சுயாதீன நிறுவனமாக சீட்ஸ்(கெரண்டி) கம்பெனி இயங்கி வருகின்றது.













சர்வோதய நிலைபேறான பொருளாதார அபிவிருத்தி நிறுவனம்

## சர்வோதய நிலைபேறான பொருளாதார அபிவிருத்தி நிறுவனம்

100% வீதம் சர்வோதய இயக்கத்தின் கீழ் இயங்கிவருகின்ற சர்வோதய சீட்ஸ் நிறுவனம்(SSEEDS) ஜப்பானின் EMRO நிறுவனத்தின் அனுமதிப்பத்திரதார இலங்கையின் சாதகமான நுண்ணுயிர் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி EM எனப்படுகின்ற கரைசலை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்ற ஒரே நிறுவனமாகும்.

ஜப்பானிய பேராசிரியர் HIGA அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட தொழில்நுட்பமானது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சங்கக்கார அவர்களால் 1992 ஆம் ஆண்டு இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

EM தொழில்நுட்பமானது 03 தொகுதிகளின் கீழ் பயன்படுத்தப்படுகின்றது

- சாதகமான சுற்றாடல் தீர்வுகள்
- சாதகமான மிருக வளர்ப்பு
- விவசாயம்

SSEEDS இன் 2019 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த கணக்காண்டுக்கான சாராம்சப்படுத்தப்பட்ட நிதி நிலைமைகள் பின்வருமாறு அமைகின்றது.

- 2017/2018 ஆம் ஆண்டுக்கு ஒப்பீடாக 2019 ஆம் ஆண்டின் மொத்த வருமானம் 23% ஆல் அதிகரித்துள்ளதோடு அது 19.2 மில்லியன் ரூபா தொடக்கம் 23.5 மில்லியன் ரூபா வரை அமைந்துள்ளது
- மொத்த விற்பனையானது 48,041 லீட்டர் தொடக்கம் 58,481 லீட்டர் வரை - வளர்ச்சி 22% ஆகும்
- தேறிய இலாபம் 3.6 மில்லியன் ரூபா - வளர்ச்சி 15% ஆகும்.
- நிறுவனத்தின் மொத்த இலாப விகிதம் - வளர்ச்சி 84% ஆகும்.
- ஒரு தொழிலாளர் மொத்த வருமானத்திற்கு பங்களிப்பு நல்குதல் - வளர்ச்சி 2.4 மில்லியன் ரூபா தொடக்கம் 3.4 மில்லியன் ரூபா வரை ஆகும்.
- பங்கிலாபம் பகிரப்படுதல் - ஒரு பங்குதாரருக்கு 500,000 ரூபா வீதம் 1000,000 ஆகும்.

### நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட கருத்திட்டங்கள்

- கெரவலப்பிட்டி கழிவுப்பொருள் முற்றத்திற்கான கருத்திட்டம்

இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினால் கொழும்பு பிரதேசத்தில் ஒன்றுசேர்கின்ற திண்மக் கழிவுப் பொருள்கள் கெரவலப்பிட்டி பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு இடத்திற்கு கொண்டு வரப்படுகின்றது.

### சாதகமான மனித சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக சர்வோதயம் தலையிடுகின்றது.

இந்த கழிவுப்பொருள் அகற்றப்படும் முற்றம் பல துறைகளின் ஊடாக சுற்றாடலுக்கும் மனித சுகாதாரத்திற்கும் தாக்கம் ஏற்படுத்துகின்றது. இந்த இடத்திற்கு நாளொன்றுக்கு திண்மக் கழிவுப் பொருள் 750 மெட்ரிக் டன்களுக்கும் அதிகமாக கொண்டுவரப்படுகிறது. அதிக துர்நாற்றம் வீசுதல் மற்றும் நிலத்தடி நீருடன் கழிவுப்பொருள் சேர்தல் என்பன இதன் பாதகமான தாக்கங்களாக எடுத்துக்காட்ட முடியும்.

மேற்படி சிக்கல்களைத் தீர்ப்பதற்காக எமது நிறுவனமானது(EM தொழில்நுட்பம்) சாதகமான நுண்ணுயிர் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி தீர்வு வழங்குவதனை தற்போது ஆரம்பித்துள்ளது. மிகவும் வெற்றிகரமாக கழிவுப் பொருளிலிருந்து வெளியேறும் துர்நாற்றம் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அதேவேளை திண்மக் கழிவுப் பொருட்களை துரிதமாக இது உக்கச் செய்கின்றது.

இவ்வாறு சுற்றாடலுக்கும் மனித சுகாதாரத்திற்கும் ஏற்படுகின்ற பாதகமான தாக்கங்களை வெற்றிகரமாக கட்டுப்படுத்துவதற்கு எம்மால் முடிந்துள்ளது. இந்த வகையில் ஒட்டுமொத்த சர்வோதயத்தின் தத்துவம் மற்றும் நோக்கங்கள் என்பவற்றை நிறைவேற்றிக்கொள்வதற்கு எமது நிறுவனத்திற்கு முடிந்துள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க முடியும்.













கிராமிய தொழில்நுட்பச் சேவைகள் பிரிவு

## கிராமிய தொழில்நுட்பச் சேவைகள் பிரிவு

1. நிறைவேற்றுச் சுருக்கம் - கிராமிய மற்றும் பகுதியளவிலான நகர்ப்புற மக்களின் அடிப்படை மனித நேயத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றும் பொருட்டு சமுதாயக் கருத்திட்டங்களை பொருத்தமான தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்துதல், தொழில்சார் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் இளைஞர் சமுதாயத்தினை தொழில்நுட்ப ரீதியாக வலுவூட்டுதல் மற்றும் அதனூடாக தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு சர்வோதய கிராமிய தொழில்நுட்பச் சேவைகள் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### 2. நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள்/சேவைகள்

தற்கால சவால்களுக்கு காலத்திற்கேற்ற வகையில் முகங்கொடுத்து பிரிவின் ஆரம்பக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும் அதன் நிலைபேறான இருப்புக்குத் தேவையான நிதி வளங்களை அதிகரித்துக்கொள்வதற்காகவும் உருவாக்கப்பட்ட சர்வோ டெக் தனியார் கம்பெனிக்கு ஒருங்கமைவாக உரிய காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்ட சேவைகள் பற்றிய சுருக்க அறிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

**தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

தச்சுக் கைத்தொழில் பயிற்சிப் பாடநெறி - 2018

இடம் - தச்சுவேலை பயிற்சி நிலையம் - சர்வோதய மாவட்ட நிலையம் - மாத்தளை

பங்கேற்பாளர்கள் 15 - பயிற்சிக் காலம் - 2018.01.06 தொடக்கம் 2018.10.31

கருத்திட்ட தொகை 2,906,970/- ரூபா

**இலங்கை தேசிய சர்வோதய சிரமதான சங்கத்துடன் இணைந்த நிறுவனங்களுக்கான சேவைகள்**

- திருமதி. ரொயெலின் அவர்களின் தாயாரின் வீட்டின் கூரை தயரிக்கப்பட்டு வண்ணம் பூசுதல் - ஒப்பந்தத் தொகை - 530,000/-

**ஏனைய நிர்மாணக் கருத்திட்டங்கள் பற்றிய விபரங்கள்**

- சிறுவர் அபிவிருத்தி நிலையக் கட்டிடம் மற்றும் விளையாட்டரங்கு மீளமைப்பு - நோர்வூட் கருத்திட்டம்-ஒப்பந்தத் தொகை - 348,552/46 ரூபா
- சிறுவர் அபிவிருத்தி நிலையக் கட்டிடம் மற்றும் விளையாட்டரங்கு மீளமைப்பு - கிரெஹெட் கருத்திட்டம் - ஒப்பந்தத் தொகை 5,165,649/69ரூபா
- சிறுவர் அபிவிருத்தி நிலையக் கட்டிடம் மற்றும் விளையாட்டரங்கு மீளமைப்பு -சென்குஹார் கருத்திட்டம் - ஒப்பந்தத் தொகை5,165,649/69ரூபா
- தாய் மற்றும் சேய் கிளினிக் நிலையக் கட்டிடம் நிர்மாணிக்கப்படுதல் - ஒப்பந்தத் தொகை - 11,483,423/50ரூபா
- ஸ்டார் பேக்கேஜிங் தனியார் கம்பெனி தடுப்புச்சுவர் நிர்மாணிக்கப் படுதல்- ஒப்பந்தத் தொகை - 14,137,920/- ரூபா
- பிலியந்தல கனிஷ்ட வித்தியாலயம் நிர்மாணிக்கப்படுதல் - ஒப்பந்தத் தொகை 6,975,850/- ரூபா
- பச்சை இறப்பர் மற்றும் இரசாயன பகுப்பாய்வு திணைக்கள கட்டிடம் திருத்தப்படுதல் - ஒப்பந்தத் தொகை 17,221,259/43 ரூபா
- நீர் வளங்கள் கருத்திட்டத்தின் நிர்மாணிப்பு - ஸ்டர்லின் பிரிவு ஒப்பந்த தொகை - 5,931,220/- ரூபா

விசேட விடயங்கள்

**சேதன விவசாய முறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மரக்கறி மற்றும் பழவகை செய்கை கருத்திட்டத்தின் அனுகூலங்கள்**

- செயற்கை உரம் மற்றும் கிருமி நாசினிகள் பயன்படுத்தப்படாமல் மரபுரீதியான சுற்றாடல் நேய பயிர்ச்செய்கை முறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மரக்கறி மற்றும் பழவகை செய்கைக்காக 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பயிர்ச் செய்கை கருத்திட்டமானது மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியிலும் மாத்தளை தச்சு வேலை பயிற்சி நிலையத்தை மையமாகக்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.
- பயிற்சிபெற்ற பாடநெறிதாரிகளுக்கு நாளாந்த அமர்வுகளை ஆரம்பிப்பதற்கு முன்னரும் ஆரம்பித்த பின்னரும் தமது ஓய்வு நேரத்தை பயனுள்ளதாகவும் மற்றும் புத்தாக்கச் செயற்பாடுகளிலும் ஈடுபடுத்துவதற்காக கருத்திட்டத்தின் மூலம் வாய்ப்புக் கிடைத்தது.
- வதிவிடப் பயிற்சியின்போது புதிய மரக்கறி மற்றும் பழவகைகள் நுகர்வுக்காக பயன்படுத்தப்பட்டதோடு மேலதிக உற்பத்திகளை விற்பனை செய்து மேலதிக வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கும் அவர்களால் முடிந்தது.
- பயிற்சியைப் பூர்த்தி செய்து தமது கிராமங்களுக்குச் சென்றதன் பின்னரும் சேதன விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான தூண்டல் அதனூடாக கிடைக்கப்பட்டதோடு குழுக்களாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் கூட்டு விவசாயப் பண்ணை எண்ணக்கருவின் வியாபித்தலும் இடம்பெற்றது.
- அதேவேளை பயிற்சி பெற்றவர்களுக்கு பாடத்திட்டத்திற்கு மேலதிகமாக ஆங்கிலம் பற்றிய அடிப்படை அறிவினை பெற்றுக்கொடுப்பதற்கும் ஆன்மீகப் பெறுமதிகள், சமூகக் கடப்பாடுகள், சர்வோதய தத்துவம் மற்றும் நல்லொழுக்கம் தொடர்பாக விழிப்பூட்டல்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**கிராமிய தொழில்நுட்ப சேவைகள் பிரிவின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளுதல்**

12 வருடங்கள் பூராக மாத்தளை தச்சுவேலை பயிற்சி நிலையத்தினை மையமாகக்கொண்டு தச்சு வேலை பயிற்சிப் பாடநெறிகள் 13 கிராமிய தொழில்நுட்பச் சேவைகள் பிரிவின் நெறிப்படுத்தலின் மூலம் நடத்தப்பட்டு குறைந்த வருமானம் பெறுகின்ற மக்கள் மத்தியில் தெரிவு செய்துகொள்ளப்பட்ட நூற்றுக்கணக்கானவர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்பட்டது. அப்பாடநெறிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மீளாய்வின் பிரகாரம் அவ்வாறு பயிற்சிபெற்ற நபர்களுக்கு மத்தியில் பெரும்பாலானவர்கள் அரசாங்க/ அரசசார்பற்ற/தனியார்/சுயதொழில் ஆகிய துறைகளில் தொழில்வாண்மையாளர்களாக ஈடுபட்டு பயன்மிக்க வகையில் பணியாற்றி வருவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இளைஞர் சமுதாயத்தினை தொழில்நுட்ப ரீதியில் வலுவூட்டுதல் மற்றும் அதனூடாக தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கான பிரிவின் அடிப்படை நோக்கம் நிறைவேறியிருப்பது என்பன அதன்மூலம் புலப்படுகின்றது. அவ்வாறு தமது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு முடிந்துள்ளமை தொடர்பாக கிராமிய தொழில்நுட்பச் சேவைகள் பிரிவானது தன்னடக்கத்துடன் மகிழ்ச்சியடைகின்றது.

**ஒட்டுமொத்த சர்வோதயத்தின் தத்துவம் மற்றும் நோக்கங்கள் என்பவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்காக பங்களிப்புச் செய்யப்பட்ட விதம்**

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் சர்வோதய கிராமிய தொழில்நுட்பச் சேவைகள் பிரிவானது நீர் வழங்கல் முறைமைகள், பாடசாலை, முன்பள்ளி கட்டிடங்கள், உயர் கல்வி நிறுவனக் கட்டிடங்கள், தாய் மற்றும் சேய் கிளினிக் நிலையங்கள், சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் விளையாட்டரங்குகள் என்ற வகையில் நிர்மாணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. அவற்றுக்கு மத்தியில் பெரும்பான்மையானவை பொதுசன நலனுக்காக முன்னெடுக்கப்பட்ட கருத்திட்டங்களாகும். அத்தகைய கருத்திட்டங்களுக்காக தொழில்நுட்பச் சேவைகளை வழங்குவதன் மூலம் அடிப்படை மனிதநேயத் தேவைகளாக இனங்காணப்பட்டுள்ள நீர், வீடமைப்பு மற்றும் கல்வி வசதிகளை பூர்த்தி செய்வதும் சர்வோதயத்தின் நோக்கமாகும்.














பியுஷன் பிரிவு

## பியூஷன் பிரிவு

உலக சமூகத்தைப் போலவே இலங்கை சமூகமும் 21 ஆம் நூற்றாண்டைக் கடந்து தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் என்பவற்றுக்கு தனிச்சிறப்பு வாய்ந்த முன்னுரிமையை வழங்கி 22 ஆம் நூற்றாண்டில் பிரவேசிக்கின்றது. இதிலே மிகவும் முக்கியமாக அமைவது தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தமது செயலாற்றுகை மற்றும் ஆற்றலினை துரிதப்படுத்திக்கொள்வதாகும். மனிதன் அபிவிருத்தியின் பொருட்டு தனது உடல் உழைப்பினை பயன்படுத்தும்போது தாம் இருக்கக்கூடிய ஆரம்ப மட்டத்திலிருந்து முன்னகர வேண்டுமானால் தகவல் தொழில்நுட்பம் பற்றிய தமது அறிவினை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். அது தன்னந்தனியாக வாழ்வதைவிட கூட்டுச் சமூகமாக தமது இருப்பினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இன்றியமையாததாக அமைவதனால் தொழிநுட்பம் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது.

சர்வோதய இயக்கமானது கிராமிய மக்களின் அடிப்படைத் தேவைகளை நோக்காகக் கொண்டு ஒட்டுமொத்த சமூகத்தை போலவே உலகளாவிய சமூகத்தையும் இலக்காகக் கொண்டு பணியாற்றுகின்றது.

கிராமிய மற்றும் நகர்புற சமுதாயங்கள் தகவல் தொழில்நுட்பத்தில் வலுவூட்டப்படுவதனை நோக்கமாகக் கொண்ட அபிவிருத்தித்துறை சர்வோதய பியூஷன் நிறுவனத்தின் மூலம் அரவணைக்கப்படுகின்றது. அது சர்வோதயத்திற்கான பிரதான பிரவாகத்துடன் இணைந்த சுயாதீன கருத்திட்டமாக இயங்கிவருவதோடு அதன் பொருட்டு சமூகத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளும் நோக்கத்தின்போது தகவல் தொழில்நுட்பத்திற்கான பல்வேறுபட்ட துறைகள் அரவணைக்கப்படுகின்றன. அதன் பிரகாரம் டிஜிட்டல் எழுத்தறிவு, டிஜிட்டல் அணுகுமுறை மற்றும் சிவில் அனுகூலங்கள் ஆகிய விடையங்களை மிகவும் வெற்றிகரமான முறையில் திட்டமிடுவதற்கும், அனுகூலங்களை பகிர்ந்து கொள்வதற்கும், பெற்றுக்கொடுப்பதற்கும் முடிந்துள்ளது.

இந்நாட்டின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியின் பொருட்டு அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், சமுதாய அமைப்புகள் மற்றும் சர்வதேச அபிவிருத்தி நிறுவனங்களுடன் நீண்டகாலமாக பணியாற்றியதன் காரணமாக அப்பணிகள் தொடர்பான பெரும் அனுபவத்தினை பியுஷன் நிறுவனம் கொண்டுள்ளது.

சர்வோதய இயக்கத்தின் கல்விக் கருத்திட்டமொன்றாகிய பியூஷன் நிறுவனத்தின் மூலம் கணினிக் கல்வியினைப் பெறுவதற்கான வாய்ப்பினை இழந்த இளைஞர் சமுதாயத்திற்கு குறிப்பாக, கிராமிய பிரதேசங்களில் இருக்கக்கூடிய ஏழைச் சமுதாயங்களை இலக்காகக் கொண்டு பெரும் பணி நிறைவேற்றப்படுகின்றது.

**நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள்**

**கணினிக் கல்வி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

- கணினி மென்பொருள் டிப்ளோமா பயிற்சி
- கணினி விஞ்ஞான டிப்ளோமா பயிற்சி
- Micro soft officemd,Gud,dj(MOS) Micro soft தொழில்நுட்பப் பயிற்சி பாடநெறி
- (MTA) சிஸ்கோ பாடநெறி
- KIDS I II 05 ஆம் ஆண்டு பிள்ளைகளுக்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடநெறி மற்றும் ஆங்கில மொழி பற்றிய பாடநெறிகள்
- முன்பள்ளி மாணவர்களுக்கான IT நல்வழி நிகழ்ச்சித்திட்டம்.

## நிகழ்ச்சித் திட்டங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறுகள்

- கணினி தகவல் தொழில்நுட்ப டிப்ளோமாதாரிகள் 40,000 பேர் பயிற்றுவிக்கப்படுதல்.
- பின்தங்கிய பிரதேசங்களில் தொழில்நுட்பத் திறன் 75% வீதம் வரை அதிகரிக்கப்படுதல்.
- பல்வேபட்ட சமூக உபசார கருத்திட்டங்களின் ஊடாக சமுதாயத்தை விழிப்பூட்டுவதற்கும் அவர்களை வலுவூட்டுவதற்கும் வாய்ப்புக் கிடைத்தல்.
- கல்வி அமைச்சுடன் இணைந்து இந்நாட்டின் பாடசாலைப் பிள்ளைகளுக்கு தகவல் தொழில்நுட்பத்தின் சாதகமான பயன்பாடு தொடர்பாக IT நல்வழி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக அறிவை புரிதல் பெற்றுக்கொடுத்தல்
- தொழிற்சந்தைக்குப் பொருத்தமான வகையில் தகவல் தொழில்நுட்பப் பயிற்சியின் மூலம் இளைஞர் யுவதிகளுக்கு வழிகாட்டல் மற்றும் அவர்களின் ஆளுமை விருத்தி மேற்கொள்ளப்படுதல்.




### சர்வோதயம் - பியுஷனின் ஒட்டுமொத்த செயற்பாடு 2018.:2019















சர்வோதய மகளிர் இயக்கம்

## சர்வோதய மகளிர் இயக்கம்

**அறிமுகம்**

1958 ஆம் ஆண்டு சர்வோதய இயக்கத்தின் ஆரம்பத்துடன் களத்தில் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது பங்கேற்றவர்களின் பெரும்பான்மையானவர்கள் பெண்களாக அமைந்திருந்தமையினாலும் அப்பெண்கள் பல்வேறுபட்ட சிக்கல்களுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுத்திருந்தமையினாலும் அவர்களுக்காக புறம்பானதொரு பிரிவை ஆரம்பிப்பதற்கான தேவை உருவானது. அதன் பிரகாரம் 1987 ஆம் ஆண்டு சர்வோதயத்தின் தலைவர் கலாநிதி ஏ.ரீ.ஆரியரத்ன அவர்களின் எண்ணக்கருவொன்றின் பிரகாரம் அவருடைய ஆலோசனையின் கீழ் முதலாவது தலைவியாக சீதா ராஜசூரிய அம்மையாரினதும் உப தலைவி நீதா ஆரியரத்ன அம்மையாரினதும் தலைமையில் சர்வோதய மகளிர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் 2001 ஆம் ஆண்டு சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் இந்த நிறுவனம் ஒரு சுயாதீனப் பிரிவாக தனியாக பதிவு செய்யப்பட்டது.

**நோக்கங்களும் குறிக்கோள்களும்.**

- உண்மை, அகிம்சை மற்றும் சுயநலமின்மை ஆகிய மூன்று வகை கொள்கைகளின் மீது அடிப்படையாக அமைந்து சேவைகளில் ஈடுபடுதல் மற்றும் நால்வகை பாதகங்களிலிருந்து பெண்களையும் சிறுவர்களையும் மீட்டெடுத்தல்.
- வலுவான குடும்பக் கூட்டுத்தாபனம் உருவாக்கப்படுதல் மற்றும் அபிமானத்துடனும் சுய சக்தியுடனும் வாழ்வதற்குத் தேவையான வாய்ப்புகளை இனங்காணுதல் மற்றும் தேசோதய சமூகப் பணியின் ஊடாக எமது அமைப்பின் கட்டமைப்புக்கான சேவைகளை முன்னெடுப்பதன் மூலம் பெண்களை வலுவூட்டுதல்.
- பங்கேற்பு ஆய்வு முறையியல் மூலம் சமுதாயத்தின் அடிப்படை தேவைகளை மதிப்பீடு செய்து அபிவிருத்திக் கருத்திட்டங்களை முன்னெடுத்தல்.
- தலைமைத்துவ ஆற்றல்கள், முகாமைத்துவம், தொழில் முயற்சி மற்றும் நிதிசார் எழுத்தறிவு மேம்படுத்தப்படுவதன் மூலம் தொழில்சார் திறன்களை மேம்படுத்துதல்.

**மகளிர் இயக்கத்தின் சேவைகள் வழங்கப்படுகின்ற இலக்குத் துறைகள்**

- பெண்கள், வறுமை மற்றும் பொருளாதார அபிவிருத்தி
- பெண்கள், கல்வி, தலைமைத்துவம் மற்றும் வலுவூட்டல்
- பெண்கள், சுற்றாடல் மற்றும் போாக்கு
- பெண்களுக்கு எதிரான வன்முறை/ மனித உரிமைகள்
- பெண்கள், நல்லாட்சி, சமாதானம் மற்றும் சகவாழ்வு
- நிறுவனசார் மற்றும் ஆற்றல் விருத்தி
- யௌவனம் மற்றும் சமூக பொறுப்புகள்( திருமணம் எதிர்பார்க்கப்பட்டுள்ள)
- பெண்கள் மற்றும் ஊடகம்

**சர்வோதய தத்துவத்தின் பொருட்டு மகளிர் இயக்கத்தின் இடையீடு**

சர்வோதயத்தின் தத்துவத்திற்கு அமைவாக ஒரு நபரின் எழுச்சியின் மூலம் குடும்பத்தின் எழுச்சியும், குடும்ப எழுச்சியின் மூலம் கிராமத்தின் எழுச்சியும், கிராம எழுச்சியின் மூலம் தேசத்தின் எழுச்சியும், தேச எழுச்சியின் மூலம் அகிலத்தின் எழுச்சியும் ஏற்படுத்தப்படுவது நோக்கமாக அமைவதோடு இவை அனைத்தும் புத்தி கூர்மையான, அறிவுள்ள மற்றும் பண்புள்ள பெண்களின் பங்கேற்பின் மூலமே வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட முடியும். எனவே மகளிர் இயக்கத்தின் மேற்படி சகல சேவைகளும் சிறந்த ஒரு சிறுமியை, நண்பியை, மனைவியை, தாயை மற்றும் சமூக உதவியாளரை உருவாக்கும் நோக்கத்துடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அதனூடாக பெண்களை கல்வி, சமூக, பொருளாதார, அரசியல், கலாசார மற்றும் ஆன்மீக ரீதியில் வலுவூட்டுவதன் மூலம் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு மகளிர் மன்றமானது ஒரு இடையீட்டாளராக பங்களித்துள்ளது.

| | செயற்பாடு | பங்கேற்பு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | இலங்கைப் பெண்ணின், மகளின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் பால்நிலை | 186 | ❖ பெண்களின் உரிமை, பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுதல்<br>❖ தமது உரிமைகள் தொடர்பாக பெண்களும் சிறுமிகளும் விழிப்படைதல்<br>❖ பெண்களினதும் சிறுமிகளினதும் உரிமைகள் மற்றும் பாதுகாப்புத் தொடர்பாக ஆண்களுக்குள்ளும் ஆண் பிள்ளைகளுக்குள்ளும் சாதகமான மனோபாவம் உருவாகுதல்<br>❖ பாடசாலை ஆசிரியர்கள் பெற்றோருடன் இணைந்து பெண் பிள்ளைகளுக்கு ஏற்படுகின்ற பல்வகைப்பட்ட துஷ்பிரயோகங்கள், இடையூறுகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கையெடுத்தல். |
| 02 | 1) பாலியல் மற்றும் இனப்பெருக்கத் துன்புறுத்தல் தொடர்பாக 16 செயற்பாட்டு நாட்கள் பற்றிய நிகழ்ச்சித்திட்டம்.<br><br>2) இளம் பெண்களின் வாழ்க்கைத் திறன்களைக் கட்டியெழுப்புவது தொடர்பாக பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் | 636 | ❖ பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் சம்பந்தமான சட்டதிட்டங்கள் மற்றும் இலங்கையின் சட்டப் பின்னணி தொடர்பாக சமுதாயம் விழிப்படைதல் மற்றும் அமைதியான குடும்பச் சூழல் உருவாகுதல்<br>❖ பெண்களின் உளரீதியான அழுத்தம் குறைவடைதல<br>❖ சமுதாயத்தில் ஆன்மீக அபிவிருத்தி ஏற்படுதல்<br>❖ பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள் சம்பந்தமாக நடவடிக்கைகளை மேற்கொள்வதன் பொருட்டு சமூகம் விழிப்படைதல்<br>❖ பயிற்சியில் பங்கேற்ற பெண் தலைவிகள் தமது மாவட்டத்தில் பெண்களை விழிப்பூட்டுவதற்காக தூண்டப்படுதல |
| 03 | தாய்ப்பால் வாரம் நிகழ்ச்சித்திட்டம் | 100 | ❖ தாய்ப்பால் வழங்குதல் அதிகரித்தல்<br>❖ பால்மா பாவனை குறைவடைதல்<br>❖ தொழிலுக்கு செல்லும் போது தாய்ப்பாலை பாதுகாப்பாக பெற்றுக்கொடுப்பதற்கான முறைகள் தொடர்பாக விழிப்படைதல்<br>❖ தாய்ப்பால் வழங்குவதற்குப் பொருத்தமான சூழல் தொழில் நிலையங்களில் உருவாகுதல். |
| 04 | பொருளாதார வலுவூட்டல மூலம் பெண்கள் வலுவூட்டப்படுதல் மற்றும் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் (வலுரட்ப்ரோல் கருத்திட்டம | 110 | ❖ தொழில்முயற்சி மற்றும் தலைமைத்துவ ஆற்றல்களை மேம்படுத்திக் கொள்வதற்காக<br>• பங்குபற்றுவோருக்கு வாய்ப்புக் கிடைத்தல்.<br>• சமுதாயத் தொடர்புகள் வலுவடைதல்.<br>❖ சவால்களுக்கு முகங்கொடுக்கும்போது திடசங்கற்பம் மற்றும் அர்ப்பணிப்பு முன்னேற்றமடைதல்<br>❖ பெண்கள் குடும்பத்தின் மனைப் பொருளாதார முகாமைத்துவத்தை முறையாகப் பேணிச் செல்வதற்கு தூண்டப்படுதல்<br>❖ வறுமையின் காரணமாக உயர்கல்வி பயில்வதற்கு சிரமப்படுகின்ற 10 பிள்ளைகளுக்கு உயர்கல்வி பயில்வதற்கான வாய்ப்பு கிடைக்கப்படுதல். |
| 05 | தரமான சுகாதார பாதுகாப்பு மற்றும் போசாக்குப் பற்றிய நிகழ்ச்சித்திட்டம் | 120 | ❖ பிள்ளைகளின் சுகாதார பாதுகாப்பு மற்றும் போசணை தொடர்பாக பதவிபணியினதும் தாய்மார்களினதும் கவனம் செலுத்தப்படுதல்.<br>❖ போஷாக்குடன் கூடிய உணவு வகைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக பிள்ளைகள் விழிப்படைதல்.<br>❖ உணவு வகைகளின் தரம் மற்றும் அவற்றை பெற்றுக்கொள்வது தொடர்பாக கர்ப்பிணித் தாய்மார்களின் கவனம் செலுத்தப்படுதல் |
| 06 | சர்வதேச மகளிர் தின நிகழ்ச்சித்திட்டம் | 165 | ❖ குடும்பத்தின் உணவு வேளையை போசாக்குடன் தயாரிப்பதற்குத் தூண்டப்படுதல்<br>❖ சமூகப் பொறுப்புகள் தொடர்பாக விழிப்படைதல். |
| 07 | வாழ்க்கைத்திறன் மற்றும் தலைமைத்துவம் என்பவற்றின் மூலம் அகதி நிலையிலுள்ள பெண்களை வலுவூட்டுதல் | 24 | ❖ மனித உரிமைகள் தொடர்பாக விழிப்படைதல்<br>❖ போசாக்கான வகையில் உணவு தயாரித்தல் தொடர்பாக விழிப்பூட்டப்பட்டிருத்தல்<br>❖ தலைமைத்துவ திறன்கள் மேம்படுதல் |













சர்வோதய மரவேலை உற்பத்தி பிரிவு

## சர்வோதய மரவேலை உற்பத்தி பிரிவு

சர்வோதய சிரமதான சங்கத்தின் கீழ் ஒரு சுயாதீனப் பிரிவாகத் தாபிக்கப்பட்டுள்ள சர்வோதய வெட்டுமர உற்பத்தி பிரிவு 2019 ஆம் ஆண்டில் 48 வருடங்களைப் பூர்த்தி செய்கின்றது. 1971 ஆம் ஆண்டு கிராமிய இளைஞர் சமுதாயத்தினை இலக்காகக் கொண்டு தச்சுவேலை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு பிற்காலத்தில் வருமானம் ஈட்டுகின்ற ஒரு பிரிவாக விரிவாக்கப்பட்டு வெட்டுமரக் கைத்தொழில் துறைக்கான சந்தை இலக்காகக்கொள்ளப்பட்டு உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

"தொழில்முயற்சி அபிவிருத்தியினை மையமாகக்கொண்ட பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்காக" மரவேலை பிரிவு சில பிரதான கிளைகளின் கீழ் பரந்த வீச்சில் இயங்கி வருகின்றது.

அதேவேளை இலங்கையில் பாடசாலை தளபாட உபகரணங்கள் மற்றும் சிறுவர் கல்வி உபகரணங்கள் என்பவற்றை வழங்குகின்ற பிரதான வழங்குனர் நிறுவனமாக சர்வோதய மரவேலை உற்பத்தி பிரிவு(Sarvodaya wood work Production Unit) பெரும் பிரசித்தியைப் பெற்றுள்ளது.

சமூக உபசார பொருளாதார அபிவிருத்தியின் பங்காளர் நிறுவனம் என்ற வகையில் சர்வோதய மரவேலை உற்பத்தி பிரிவானது கிராமிய ஏழை மக்களுக்கு அளப்பரிய பணிகளை நிறைவேற்றி வருகின்றது. தற்போது தளபாட உற்பத்தி மற்றும் சிறுவர் கல்வி உபகரண வழங்குனர்கள் சுமார் 68 பேர் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

### 01. பிரதான சந்தை வாடிக்கையாளர்கள்

1. அரச நிறுவனங்கள்
2. அரசசார்பற்ற அமைப்புகள்
3. சர்வதேச பாடசாலைகள்
4. முன்பள்ளிகள்
5. ஏனைய தனிப்பட்ட வாடிக்கையாளர்கள்

- சர்வோதய மரவேலை உற்பத்தி பிரிவின் பிரதான உற்பத்தியாகிய சிறுவர் கல்வி உபகரணங்கள் மற்றும் தளபாட உபகரணங்கள் தயாரிக்கப்படும் போது பெண்களின் பங்களிப்பினை உச்ச மட்டத்தில் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளமையானது சிறப்புப் பண்பாகும்.

### 02. செயற்பாடுகள்

1. மரங்களை களஞ்சியப்படுத்துவதன் பொருட்டு புதிய கலைஞ்சியமொன்றை நிர்மாணிப்பதற்காக முன்னெடுப்புக்களை மேற்கொள்ளுதல்.
2. வெளியில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக வெளிக் கட்டிடம் ஒன்றை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளுதல்.(சமனதெத்த மற்றும் சர்வோதயத் தலைமையகம்)
3. சமூக உபசார நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பணியாளர் தொகுதியின் பங்கேற்புடன் கஹபொல சர்வோதய முன்பள்ளியின் வெளி வேலியை நிர்மாணிப்பதற்காக சிரமதானமொன்றை நடாத்துதல்.

| | 2019 மார்ச்31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடம் |
|---|---|
| விற்பனை | 35, 082, 411. 99 |
| விற்பனை விலை | 19, 914, 829. 52 |
| மொத்த இலாபம் | 15, 167, 582. 47 |
| ஏனைய வருமானம் | 2, 534, 458. 38 |
| நிர்வாகச் செலவு | 8, 218, 266. 26 |
| விற்பனை மற்றும் விநியோகம் | 1, 434, 458. 36 |
| நிதி மற்றும் இதர | 1, 053, 947. 76 |
| தேறிய இலாபம் | 6, 995, 901. 71 |










**சர்வோதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**

# சர்வோதய நம்பிக்கை நிதியம்

மனிதநேய மேம்பாட்டுக்காகவும் சமாதான உருவாக்கத்திற்காகவும் சர்வோதயத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்காகவும் ஆரம்பிக்கப்பட்ட சர்வோதய நம்பிக்கை நிதியமானது 1984 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் சட்டமாக்கப்பட்டுள்ளது. அதன் தொழிற்பாட்டு விதிகள் இச்சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்டுள்ளன. நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக சிறந்த சேவைகளை நோக்கமாகக் கொண்டு நிதியம் தாபிக்கப்பட்டுள்ளது. வழங்கும் நபர்களுக்கு சன்மானம் வழங்குவதனை

நிதியத்தின் நிர்வாகம், கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவம் என்பன ஆரம்பக்கர்த்தாவாகிய கலாநிதி ஏ.ரீ. ஆரியரத்ன அவர்களால் நியமிக்கப்பட்ட ஒன்பது ஆயுட்கால அங்கத்தவர்களைக் கொண்டமைந்த சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டில் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் ஒரு அங்கத்தவராகிய திரு.கே.எல்.குணசேகர அவர்களின் மறைவு மற்றும் திரு. பீ.ஏ.ட. குணசிங்க அவர்களின் சுகயீனம் காரணமாக அவர் ராஜினாமா செய்தல் என்பன இடம்பெற்றதோடு அது தொடர்பாக நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் ஆழ்ந்த மன வருத்தம் தெரிவிக்கபடுவதோடு தற்போது புதிய அங்கத்தவர்கள் இரண்டு பேர் நியமிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் கௌரவத் தலைவராக கலாநிதி ஏ.ரீ. ஆரியரத்ன அவர்களும் கௌரவ செயலாளராக கெப்டன் திரு. ஜீவன் ஆரியரத்ன அவர்களும் செயற்பட்டு வருகின்றனர்.

சம்பந்தப்பட்ட வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு பிரதான பணியாக ஆறு தசாப்தகால சர்வோதய இயக்கத்தின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பன பிரதிபலிக்கப்படுகின்ற நூதனசாலையொன்று மெத்மெதுர கட்டடத் தொகுதியில் தாபிக்கப்பட்டுள்ளது. சர்வோதய இயக்கத்தின் அபிவிருத்தி பற்றிய புகைப்படங்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் உப தலையங்கங்களுடன் காட்சிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பணியின் பூராகவும் சர்வோதய இயக்கத்தினால் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அதேவேளை மெத்மெதுர கட்டிடமானது பழைய கட்டிடக்கலை பாதுகாக்கப்படுகின்ற வகையில் மறுசீரமைக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மெத் மெதுர கட்டிடத்தொகுதியின் கட்டிடங்களை உள்ளிட்டதாக அதன் உரிமையை முறையான வகையில் சுவிகரித்துக்கொள்வதற்கு சபைக்கு முடிந்துள்ளது. கட்டிடங்களை வாடகைக்கு வழங்குவதன் மூலம் கிடைக்கப்படுகின்ற வருமானம் பொறுப்பு நிதியத்திற்கு சாட்டப்படுவதுடன் பொறுப்பு நிதியத்தின் நிதி நிலைமை வலுவடைந்துள்ளது. பங்குகளை கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய நிதி கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுதல் என்பவற்றின் பொருட்டு சட்டங்களை திருத்துவதற்கும் சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த மாற்றங்களுடன் எதிர்வரும் வருடத்திலிருந்து சபைக்கு அதன் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான இயலுமை கிடைக்கும்

















சர்வோதய சுவசெத சேவைகள் சங்கம்

## சர்வோதய சுவசெத சேவைகள்

1986 ஆம் ஆண்டு சர்வோதய சுவசெத சங்கம் தாபிக்கப்பட்டதோடு சர்வோதயத்துடன் இணைந்த நிறுவனமாக சமூக உபசார சேவையில் அது ஈடுபட்டு வருகின்றது. சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் மற்றும் ஆதரவற்ற, கைவிடப்பட்ட மற்றும் தெருக் குழந்தைகள் போன்ற சமுதாயத்தினரை தமதாக்கிக்கொண்டு பரந்த வீச்சில் சுவசெத சேவைகள் பிரிவானது செயற்பட்டு வருகின்றது. பிள்ளைகளின் பாதுகாப்பு, அவர்களின் இருப்பு, கல்வி, துப்பரவேற்பாடு போன்ற விடயங்கள் சம்பந்தமாக சுவசெத சேவைகள் பிரிவானது கவனம் செலுத்துகின்றது. விடலைப் பருவத்தினர், யௌவனர்கள், அங்கவீனமுற்றவர்கள், சமூக அநீதிகளின் முன்னால் நிர்கதி நிலையை அடைகின்ற கருத்தரித்த சிறுமிகள் என்போரை பிரஜைகளாகக் கருதி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முதன்மை சமூக சேவை நிறுவனமொன்றாக சுவசெத சேவைகள் நிறுவனமானது இலக்கம்/62414இன் கீழ் பாராளுமன்ற சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சட்ட ரீதியான கட்டமைப்பின் கீழ் இயங்கிவருகின்றது.

**அதன் கீழ் 2018/2019 ஆம் ஆண்டில் பேணிவரப்படுகின்ற சேவைகளும் பணிகளும்**

1. சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் (சிறுவர் இல்லங்கள்) நடைமுறைப்படுத்தப்படுதல்.

   மொறட்டுவ - சுவசெத குழந்தை போசாக்கு நிலையம், மாசெவன சிறுவர் அபிவிருத்தி நிலையம் - லுனாவ, லீலா ஜயசேகர சிறுவர் அபிவிருத்தி நிலையம் லுனாவ, தருசேவன சிறுவர் அபிவிருத்தி நிலையம் –கொஸ்கம, வாரியபொல பாலிகா சிறுவர் அபிவிருத்தி நிலையம், ரத்னாயக்க ஞாபகார்த்த நிலையம்- அக்குரெஸ்ஸ, காலி, பட்டகன்வில பாலிகா சிறுவர் அபிவிருத்தி நிலையம் பலப்பிட்டிய/பத்தேகம பாலக சிறுவர் அபிவிருத்தி நிலையம்

2. சிங்கித்தி சேவா/முன்பள்ளிகள்/முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்கள் பேணப்படுதல்.

   ❖ மொரட்டுவை, சுவசெத்த முன்பள்ளி அக்குரெஸ்ஸ, ஜமனி முன்பள்ளி மற்றும் குழந்தைக் காப்பகம், வாரியபொல முன்பள்ளி.

3. மூத்த பிரஜைகளுக்கு சேவைகளை வழங்குதல்

   ❖ ரத்மலான, அக்னஸ் குணசேகர ஞாபகார்த்த முதியோர் இல்லம்
   ❖ கம்பஹ, ஜெயவர்தன ஞாபகார்த்த முதியோர் இல்லம்
   ❖ ஹிக்கடுவ, சுவசெத முதியோர் இல்லம்
   ❖ மாரவில, ஆனந்த ஹேரத் முதியோர் இல்லம்

4. அங்கவீனமுற்ற நபர்களுக்கான சேவைகள் வழங்கப்படுதல்

   ❖ தல்பாவில, ஆனந்த கிரேரு ஞாபகார்த்த இல்லம். அங்கவீனமுற்ற பெண்களுக்கான காப்பகம் மொறட்டுவ,
   ❖ அங்கவீனமுற்ற மகளிர் தொழிற்பயிற்சி நிலையம்.

5. விசேட கல்வி அலகு பேணப்படுதல்

   ❖ வரக்காகொட, விசேட தேவைகளைக் கொண்ட பிள்ளைகளுக்கான மதியநேர பாடசாலை
   ❖ தல்பாவில, விசேட தேவைகளைக் கொண்ட சிறுவர்களுக்கான மதிய நேர பாடசாலை

6. விசேட கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைபடுத்தப்படுதல்.

   ❖ அங்கவீனமுற்ற நபர்களுக்கான புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டம்
   ❖ திடீர் விபத்துக்கள் மற்றும் அனர்த்த சந்தர்ப்பங்களில் தாய் சங்கத்தினால் நடைமுறைபடுத்தப்படுகின்ற
   ❖ நிவாரண சேவை நிகழ்ச்சித் திட்டங்களுக்குப் பங்களிப்பு நல்குதல்.

- அங்கவீனமுற்ற பல்வேறுபட்ட குழுக்களினால் முன்வைக்கப்படுகின்ற தேவைகளுக்கு ஆதரவு வழங்குதல்.
- பொருளாதார சிக்கல்களைக்கொண்ட பாடசாலை மாணவர்களுக்கு உபகரணங்கள் வழங்கப்படுதல்.

**02. நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்களும் அதனூடாக பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறுகளும்**

1. 2018 ஆம் ஆண்டு க.பொ.த( சா/த) பரீட்சைக்குத் தோற்றிய 10 மாணவர்களுக்கு விசேட கருத்தரங்கொன்று 2018.06.15 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை நடத்தப்பட்டது.
   - அப்பரீட்சையில் தோற்றிய 09 மாணவர்களுள் 05 பேர் 2022 ஆம் ஆண்டு க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமை பெற்றுள்ளனர்.
2. நீதிமன்ற பொலீஸ் மகளிர் பிரிவின் உத்தியோகத்தர் ஒருவரின் பங்களிப்பினூடாக சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விசேட நிகழ்ச்சித் திட்டமொன்று இடம் பெற்றது.
   - சுவசெத அலகுகளைச் சேர்ந்த பிள்ளைகள் தமது தனிப்பட்ட பாதுகாப்பினை பெற்றுக்கொள்ளுதல், அலகுகளில் ஒற்றுமையாக வாழும் விதம் தொடர்பாக பரந்த அறிவினைப் பெற்றுக்கொள்ளுதல்.
3. சர்வோதய சுவசெத பட்டகன்வில பாலிகா சி.அ.நி மற்றும் பத்தேகம பாலக்க சி.அ.நி. என்பவற்றைச் சேர்ந்த அனைத்து பிள்ளைகளுக்காகவும் விசேட மருத்துவ கிளினிக் 2018.07.15 ஆம் திகதி நடத்தப்படுதல்.
   - மேற்படி கிளினிக்கின் ஊடாக இனங்காணப்பட்ட மேலதிக சிகிச்சை தேவைப்படுகின்ற சில பிள்ளைகளை மருத்துவர்களிடமும் சிகிச்சைக்காக வைத்தியசாலைகளுக்கும் அனுப்ப முடிந்தது.
